# 41
# லௌகிகத்தின் துஷ்டப்பிள்ளை வைதிகம்

'லவ்கிகம்' என்பது 'லோக' சம்மந்தமானது, அதாவது இந்த உலகத்திற்கும் மனிதனுக்கும் உள்ள சம்மந்தம் பற்றியது. 'பரமார்த்திகம்' என்பது பெரிய பொருள் சம்மந்தமானது. அதாவது இவ்வுலகத்திற்கு அதிகமாக உள்ளது. பெரிய பொருள் அல்லது கடவுளார். அக்கடவுளுக்கும் மனிதனுக்கும் பற்றிய சம்மந்தம் பற்றியது. ஒற்றைக் கண்ணன் ஒரு பக்கமாகப் பார்ப்பது போல் சிலர் பரமார்த்திகம் என்பதை மனித லட்சியம் என்றும் லௌகிகம் ஒன்றுக்கும் உதவாத விசயம் என்றும் சொல்வதுண்டு. இவ்விடத்தில் நன்றாய் ஊன்றி யோசிக்க வேண்டும்.

மனிதன் உலகில் பிறந்தான். அவர்கட்கு பசி உண்டு. தாகமுண்டு. இவைகட்கு வழிதேட வேண்டும். உடை வேண்டும். இதுபோன்ற பிற தேவைகளும் உண்டு. இவை பூர்த்தி செய்யப்பட வேண்டும். இவைகளுக்கு ஆதரவான ஆள் வேண்டும். ஆட்சி முறை வேண்டும். இவையன்றி இயல்பாக மக்கட்கு இன்பத்தில் நாட்டமுண்டு. பூர்த்தி பெற வேண்டும். இதற்கிடையில் மக்கட்கு எப்படிப்பட்ட உயர்குணங்கள் வேண்டும்? அவைகட்கு மானம் உண்டு. இவை பறிபோகக் கூடாது. ஒரு மனிதன் மனித கோடிகளுக்கும் தனக்குமுள்ள சம்மந்தத்தை அறிவான நிலை அடையவேண்டும். அவன் அறிவு முதிர்ச்சி பெற்றவண்ண மிருத்தல் வேண்டும். இவையும், இவை

போன்ற பிறவும் லௌகிகம். இப்படிப்பட்ட லோக சம்மந்தமான விஷயத்தில் மனிதனுக்கு எவ்வளவு கவலை வேண்டியிருக்கிறது? மனித இலட்சியம் என்பது இந்த உலகத்தோடு மாத்திரம் முடிந்து விடாமல் அப்புறத்தேயும் சென்று முடிவாக வைத்துக் கொண்டாலும், எந்த அறிவாளியாவது மேற்சொன்ன லௌகிகத்தின் மனிதனைக் கவலை கொள்ளாமல் அடித்துத் தள்ள நினைக்கலாமா?

''பாரமார்த்திகம், பாரமார்த்திகம், பாரமார்த்திகம்! மற்றவை திரணம்'' இது பாரமார்த்திகரின் போதனை. பாரமார்த்திகப் போதனை செய்வோர் லௌகிகர்களைப் போலவே உண்டு, உடுத்தி, உறங்கி, இன்பமனுபவித்து, இந்த உலகத்தையே கற்கண்டாக்கித் தின்று விடவும் திட்டம் போடுவதுண்டு. உலகுக்கு வேண்டிய உழைப்பை உழைத்து தனக்கு வேண்டிய உலக போகத்தை அடைய எண்ணும் சுபாவம் மனிதனிடம் போய், பாரமார்த்திகம், பாரமார்த்திகம், பாரமார்த்திகம் என்று ஜெயிப்பார்கள். 'பெரும்பான்மை மக்கட்கு பாரமார்த்திகம் போதித்து அதனால் அவர்கள் உலக போகத்தை அடையாமல் செய்து அப்பகுதியையும் வயிற்றுக்குள் தள்ளி பெரியதோர் ஏப்பம் இட உத்தேசிக்கிறீர்களா?' என்று பாரமார்த்திகர்களைக் கேட்டால், 'பாரமார்த்திகர்கள் கண்டதே காட்சி - கொண்டதே கோலம் என்று நினைக்கிறீர்களே!' என்று உழைப்பாளிகளைக் கேட்பார்கள். இந்த வார்த்தையில் ஏழை மக்கள் தெரியாத்தனமாக நாணிச் சும்மா இருந்து விடுவது உண்டு. பாரமார்த்திகத்தில் நுழைய ஆரம்பிப்பதும் உண்டு.

ஒரு சோதனை:—

ஏழை மக்களே! உழைப்பாளிகளே! பாரமார்த்திகம் பேசும் கூட்டத்தாரை நீங்கள் பரிசோதனை செய்ய வெளிப்படையான ஒரு வழி உண்டு. உலக சம்மந்தமே உதவாது என்று எண்ணும் அவர்களையெல்லாம் ஒன்றாக நிறுத்தி நோக்குங்கள். அந்த வரிசையில் எவனாவது உங்

களைவிட உலக சம்மந்தம் அற்றவன் இருக்கிறானா என் பதைக் கவனியுங்கள். உங்கள் கருத்தை மறைத்து உங்களு டைய சொத்தையெல்லாம் பறித்து ஏராளமாக உண்ட தன் பலனாக அவர்கள் யானைகள் போல் கொழுத்து இருப்பார்கள். உங்கள் சாப்பாட்டை திரட்டி சாப்பிட்ட அவர்கள் அச்சாப்பாட்டுக்கு ஜீரணம் ஆக வேண்டிக் குண்டுக் கழுதைகள் திண்ணையில் புரளுவதைக் கண்ட தில்லையா? பாரமார்த்திகம், கடவுள் விஷயம் வாழுகிற வீட்டின் கூரையில் சாக்குருவி கத்துகிறது.

இந்த உலகம் பொய், இந்த உலகம் கனவு, பெண்கள் மாயை, வாழ்வு பொய், இளமை நீரில் குமிழி, அனைத் தும் ஒருவிதத் தோற்றம்; தமது உடற் தசையின் சன் னங்களை வயலுக்கு எருவாக இட்டு உழைத்துத் தேடி யும் ஏழைகளிடம் இதை எல்லாம் சொன்னால் அவர்கள் ஊக்கம் அடைவார்கள் அல்லவா?

ஆட்டின் ஈரலை வாயில் கடித்துக் கொண்டு கோரா வேசத்துடன் மனிதன் அங்காளம்மனுக்கு செய்யும் தொண்டு பாரமார்த்திகமா? இல்லையென்றால் இந்த ஏற்பாட்டிற் குக் காரணம் யார்?

பாமர மக்களைப் பாரமார்த்திகம் செய்துள்ளதும், பாரமார்த்திகத்தால், பாமர மக்கள் இந்நாள் மட்டும் அடைந்ததும் நிற்க, படித்தவர் எனப்படுவோரும் மதத் தலைவர் எனப்படுவோரும் அனுசரிக்கும் பாரமார்த் திகமானது சாக்கடையில் ஓடும் பெருச்சாளியின் வாயிலிருந்து அதன் முதுகிலோடி அங்கிருக்கும் விநாயகர் அவர் தம்பி மற்றும் சொந்தக்காரர்க ளிடம் சென்று பிறகு ஆகாசவாணம் போல் மேல் நோக்கிக் கிளம்புகிறது! ஆரம்பத்திலாவது திடீரென்று மேலே கிளம்பலாகாதா? சென்றால் உலக மக்களின் பணம் கோயிலுக்கென்றும், கோயில் தரகர்களுக்கென்றும் கோடிக் கணக்கில் அனுதினமும் செலவு அழியாதே! கோயில், மற் றும் மதகர்த்தர்களின் ஏற்பாடுகளெல்லாம் பாரமார்த்திக

மானால் மீதியான லௌகிகம் ஏது? இந்நாள் மட்டும் லௌகிகர்கள் ஏமாந்து கிடந்ததால், பொய், வஞ்சம், கொலை, களவு முதலியவைகளும் பாரமார்த்திக வேஷம் போட்டுத் தம் வேலையை நடத்தி வந்தது. நடத்தி வரு கிறது. இவ்விடத்தில் பாரமார்த்திகம் உதவி செய்யும் மாதிரியைக் கவனித்தால் பகுத்தறிவும், பகுத்தறிவால் விருத்தியாகும் நற்குணங்கள் பலவும் தவிர—மற்ற ஆபாசங்க ளெல்லாம் பாரமார்த்திகம் என்பது நன்றாய் விளங்கும்.

புதுவை முரசு, மார்ச்சு, 1932

*

# 42
# திரு. உமாமகேஸ்வரம் பிள்ளை உள்ளக் கிளர்ச்சி

அண்ணாமலை சர்வ கலாசாலைத் தமிழ்ப் பேரவையின் ஆண்டு விழாவானது சமீபத்தில் சர்வகலாசாலைக் கட்டிடத்தில் திரு. டி. சிவராம சேதுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றதாம். கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு உமா மகேஸ்வரம் பிள்ளை 'தமிழும் சர்வகலா சாலைகளும்' என்பது பற்றிப் பேசினார்களாம். அப்பிரசங்கத்தின் சாராம்ஸத்தைத் தமிழ்நாடு (7–3–1932) வெளியிட்டுள்ளது. உமா மகேஸ்வரம் பிள்ளை உரைத்தவற்றில் சிறு பகுதி வருமாறு:– ''இச்சர்வ கலாசாலைக்குப் பொருள் உண்டு; இடம் உண்டு; மற்றியாவுமுண்டு. ஆனால் எந்த உண்மை நோக்கோடு சர்வகலாசாலை துவக்கப்பட்டதோ அதைத்தான் காணோம்'' கரந்தைப் புலவர் நன்று கூறினார்கள்! தமிழ் நாட்டில், தமிழர் நலத்திற்குத் தமிழர் பணத்தினால், தமிழ் வளர்ப்பதன் மூலமாகத் தமிழரைப் பல்கலை வல்லுநர் ஆக்கவே அண்ணாமலை பல்கலைக் கழகம் ஏற்பட்டிருக்க வேண்டும். நோக்கம் வேறொன்றாதல் இல்லை.

ஆயினும், தமிழ் நாட்டில், தமிழர் பணத்தினால் பல்கலைக் கழகம் கண்டதின் மூலமாகத் தமிழை மறைத்து விடவே காரியம் நடைபெறுகிறது. ஐயம் ஒன்றும் இன்று. என் செய்வது!

கரந்தைப் புலவர் மேலும் கூறி வருந்துவது பின் வருமாறு:–

சர்வகலா சாலையாரால் தயாரிக்கப்பட்டிருக்கும் வருஷாந்தர அறிக்கையிலே மற்ற இலாக்காக்களின் வேலைகள் வெகு செழிப்புடன் மிளிர, இந்தத் தமிழ் (எதற்காக, எந்த நோக்கத்துடன் சர்வகலாசாலை தோற்றுவிக்கப் பட்டதோ அந்தத் தமிழ்) இலாக்காவின் வேலைகளைப் பற்றியோ, ஆராய்ச்சியைப் பற்றியோ, குறிப்புகளின்றி மௌனம் சாதிக்கப்பட்டு விட்டது!!

தோழர் மிகவும் வருந்துகிறார்கள். தமிழ் நாட்டுக்கு காட்டப்படும் வஞ்சம், பொறாமை, தமிழர் மாட்டுக் காட்டப்பெறும் கொடுமையுள்ளம் ஆகியவற்றை எண்ணுந்தோறும் தமிழறிஞர் வருந்தாது இருக்க முடியாது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்க்கலையை அடியோடு அழிப்பதற்கு உதவியான ஒரு கலை கண்டறியப்பட்டிருக்கிறது என்பதும் அதுதான் தமிழைப்பற்றி வருஷ அறிக்கைகளில் பிரஸ்தாபியாமல் இருப்பது என்பதும் எனக்குப் புலனாகிறது. ஆனால், தோழர் உமாமகேஸ்வரம் அவர்களை நான் ஒரு விஷயம் கேட்க விரும்புகிறேன். சில நாளாக இந்த பிரச்சாரக் கூச்சல் கிளப்பப்பட்டதன் நோக்கமென்ன? தமிழ் அன்னைக்கு தார் சூடவா? தமிழ்த் தருவின் வேருக்கு வெந்நீர் ஊற்றவா? சுயராஜ்யச் சொக்குப் பொடியால் ஹிந்தி பாஷைக்கு வேண்டிய ஆதரவு தேடப்பட்டபோதே நான் அறிவேன், தமிழ் தலைகவிழ்க்கப்படும் என்பதை.

இங்கிலீஷ், சங்கீதத் தெலுங்கு, சம்ஸ்கிருதம், இந்தி முதலியவைகள் இனியும் பொன்னே போல் போற்றப்படும். ஏன்? தமிழை ஒழிப்பதற்காக! இதற்கு அண்ணாமலை என் செய்வார்? பல்கலைக் கழகம் என்ன செய்யும்? நிர்வாகம் யார் வசத்திலிருக்கிறது என்பதையும், நிர்வாகஸ்தர் கொள்கை என்னவென்பதையும் அறிந்தால் ஆச்சரியப் படத் தக்கது ஒன்றுமிராது. தமிழ் என்னும் எருது அதன் பகையெனும் சிங்கத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அச்சிங்கத்தின் பிடரி பற்றி மோத வேண்டியது தமிழர் கடன்.

தோழர், உமாமகேஸ்வரம் கீழ்வருமாறு முடிவு கட்டி யிருக்கிறார்:

"தமிழர்கள் தங்கள் தாயாகிய தமிழ்த் தெய்வத்தை கவனியாவிட்டால் தாயைக் கொன்ற பாபமல்லவோ சம் பவிக்கும்."

கரந்தைப் புலவர் மேற்படி தமது பிரசங்க வாயி லாகத் தமிழ் மொழியானது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கவனிக்கப்படாதது பற்றி மிகவும் ஆத்திரப்பட்ட உள்ளத்தோடு பேசியுள்ளார்கள். இயற்கை முறையில் அவ்வாத்திரத்தின் முடிவு தோன்றாதது பற்றி நான் வருந்துகிறேன். தமிழ்த்தெய்வத்தை கவனியா விட்டால் தாயைக் கொன்ற பாவம் சம்பவிக்கும் என்று மட்டும் முடித்துக் கொண்டார்கள். பணம் பறிகொடுத்தோன் அதை மீண்டும் பெறத்தக்க முயற்சி செய்தலே இயற்கை முறை: பணத்தை போக்கடித்தால் பாவம் உண்டாகும் என்று மாத்திரம் முடிவு கட்டுதல் இயற்கைக்கு முரண்.

தோழர் உமா மகேஸ்வரத்தைப்போல் ஆயிரக்கணக் கான ஆண்டுகளாக தமிழுக்காக ஆத்திரம் அடைந்தோ ருண்டு. அவர்கள் எல்லோரும் உமாமகேஸ்வரத்தைப் போலவே தாயைக் கொன்ற பாவம் என்று சொல்லிய தோடு நின்றதால்தான் தமிழ் வளர்ச்சி பிரஸ்தாபம் அற்றதாகி வருகிறது.

தமிழைப் பகை என்பவன் எவன்? ஏன் அவ்வாறு நினைக்கிறான்? அவனுக்கென்ன அத்தனை பலம்? நாம் 'தமிழர்களாயிற்றே' பகைவர்களுக்கு நற்புத்தி கற்பிப் போம். தமிழைக் காப்போம் என்று உமா மகேஸ்வரம் இறங்கட்டும் சமர்க்களத்தில்!

உமா மகேஸ்வரம் சமர்க்களத்தில் இறங்கட்டும். அவர்கள் உடலில் தமிழ் ரத்தம் பாய்கிறது. தமிழாவே சம் நெஞ்சில் அலையாடுகிறது. மேலும் சுயமரியாதை இயக்கத்துணை அவர்கட்குக் காத்திருக்கின்றது!

இதையெல்லாம் விட்டுத் தமிழைத் தெய்வம் என்று சொல்லி அதைப் பிறர் கொல்ல விட்டுவிடாதீர்கள் என்று சொல்லுவதனால் என்ன பயன்? இப்படிச் சொல்வதனால் தமிழ்த் தெய்வத்தை அழிக்கும் அண்ணாமலை சர்வ கலா சாலை நிர்வாகஸ்தார் அத்தமிழ்த் தெய்வத்தின் தண்டனையை ஏற்கட்டும் என்று நினைத்துத் திருப்தி அடைவதாயும் நான் நினைக்க இடமேற்படுகிறது.

நிர்வாகஸ்தர்கள் நமது தமிழை தெய்வமென்று நினைக்கவில்லை. தமிழ் தமிழரின் உயிர் என்றே அந்தப் பகைவர்கள் அறிந்துள்ளனர். தமிழைத் தமிழர் விழி என்பதும் அவர்கட்குத் தெரியும்; தமிழ் தமிழர்க்கு வெற்றி என்பதும் அவர்கட்குத் தெரியும். அதனால்தான் தமிழை அழிப்பது தமிழரை அழிப்பதாகும் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள். ஆனால் உமாமகேஸ்வரம் அவர்களை மட்டும் தமிழ் என்பது தெய்வம் என்று நினைக்கும்படி செய்துள்ளார்கள். அந்தத் தெய்வத்தை வணங்கிக் கொண்டு காலங்கழிக்கட்டும் என்ற ஏற்பாட்டையும் செய்துள்ளார்கள். நம்மிடம் அறிவுப் புரட்சியையுண்டு பண்ணி அவர்கள் காரியத்தைச் செப்பனிட்டுக் கொள்ளுகிறார்கள்.

தோழர் உமாமகேஸ்வரம் உணரவில்லை போலும். தமிழரைத் தமிழ் என்று மாத்திரம் நினைத்து அதை அழிக்கும் நாத்திகரை - தமிழைத் தெய்வம் என்று நினைக்கும் ஆத்திகத்தால் எதிர்க்க வழியில்லை. தமிழ் எங்கள் பொருள் என்றும் கூறுகின்ற நாத்திகச் சுயமரியாதை இயக்கத்தின் மூலம் எதிர்ப்பதே நேர்வழியாகும்.

புதுவை முரசு, *14–3–1932*

*

# 43
# சேசுநாதர் வருகை

வெகுநேரமாக வேலை நடந்துகொண்டிருந்த போதிலும், விஷயம் பிறகு புரிந்தது. உடம்பில் விளையாடிய மூட்டைப் பூச்சிகள் காதில் காலடி வைக்காமலே இருந்திருந்தால் நான் தூங்கியபடி இருப்பேன். மூட்டை கடித்தபடி இருக்கலாம்.

நான் விழித்துக் கொள்ளும்போது இரவு 2 மணி இருக்கும். அதன் பிறகு தூக்கத்தை அழைத்துப் பார்த்தேன். வரவேயில்லை. விளக்கைப் பெரிது படுத்தினேன். அதன்பின் நான் அழைக்காமலேயே தலைமாட்டில் இருந்த சிகரெட் வாயிற் புகைந்தது. தலைமாட்டில் பின்னும் தடவினேன். ஒரு தினசரிப் பத்திரிகை கிடைத்தது.

நான் மல்லாந்து படுத்தபடி பத்திரிகைகளை புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். மேற்படி சிகரெட் என் உதடுகளின் இடையில் புகைந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் என் கண்களில் தோன்றிய விஷயம் கீழ்வருமாறு:—

*ஜெர்மன் தலைவர் தேர்தல்:—*

*''...ரைன்லாண்டில் உள்ள கத்தோலிக்கர் அனைவரும் கத்தோலிக்கரான ஹிட்லரை ஆதரிக்காமல் ப்ராட்டஸ்டண்டான ஹிண்டன்பர்க்கு வெற்றியடையப் பிரார்த்தனை செய்தார்கள்.''*

இந்த வரிகளின் அர்த்தத்தை என் உள்ளம் விழுங்கியவுடன் இருட்டும் வெளிச்சமும் இல்லாத வழியாக

நான் ஆகாயத்தில் தூக்கப்பட்டேன்; சிந்தனையுலகில் இறக்கி விடப்பட்டேன்.

அந்த சிந்தனை உலகில் என் கண்ணெதிரில் அழகிய ஜெர்மனி தோன்றியது. அதில் நாலா பக்கத்திலும் உலவிக் கடைசியில் பரந்த மைதானம் ஒன்றை அடைந்தேன். அந்த மைதானத்தில் இரண்டு பட்டாளங்கள் எதிர் எதிர் அணிவகுத்து நிற்பதைப் பார்த்தேன். ஒன்று கத்தோலிக்கப் பட்டாளம்; மற்றொன்று பிராட்டஸ்டண்ட் பட்டாளம்.

பிராட்டஸ்டண்டு பட்டாளம் கீழ்வருமாறு தமது ஆரம்ப ஆயுதப் பிரயோகம் செய்தது.

எங்கள் இண்டன்பர்க்கு வெற்றியடைய நீங்கள் எதற்காகப் பிரார்த்தனை செய்தீர்கள்? எங்கள் இண்டன்பர்க்கு வெற்றி நிச்சயம் என்று தெரிந்தபின் அவனை வளைப்பதற்காக இந்த ஏற்பாடோ? கத்தோலிக்கரான ஹிட்லர் வெற்றியடைய அல்லவோ நீங்கள் பிரார்த்தனை செய்ய வேண்டும். அவர் தோல்வியடைவது நிச்சயம் என்று தெரிந்ததும் அவரை புறக்கணித்தீரோ?

கத்தோலிக்கர்:—

எங்கள் ஹிட்லர் வெற்றியடையக்கூடும் என்று நீங்கள் முன்னரே அறிந்தாலும் உங்கள் பிராட்டஸ்டண்டு இண்டன் பர்க்கைப் புறக்கணித்து ஹிட்லரைத்தான் ஆதரித்து பிரார்த்தனை செய்வீர்கள் என்றார்கள்.

இதற்கிடையில் 'மூடர்களே, மூடர்களே' என்ற இனிய வார்த்தைகள் இரு பட்டாளத்தின் நடுவிலிருந்து கிளம்பின. ஓர் வாலிபத் திருமேனி அங்குத் தோன்றிற்று!

திருமேனி பின்னும் சொல்லுகிறது:— நான்தான் சேசுநாதர் என்றே நம்புங்கள்! 'ரக்ஷகரே, ரக்ஷகரே' என்று இருதரத்தாரும் வணங்கினார்கள்)

நான்தான் அறிவற்ற காலத்தில் மதம் போதித்தேன் என்று நம்புங்கள் ('ரக்ஷகரே, ரக்ஷகரே' என்று வணங்கினார்கள்.)

மக்கள் அறிவற்றிருந்த காலத்தில் ஏதேதோ விஷயங்களைச் சொல்லி அவைகளை நம்பச் சொன்னேன். ஆதலால் அப்போது மதம் என்ற ஓர் பலத்தின்கீழ் மனிதர் அடிமைப்பட்டதன் மூலம் முன்னேற்றமடைந்தனர். அறிவு பெருகிய இக்காலத்தில் மனித பலத்தின் கீழ் எம்மதமும் ஒழிவதன் மூலமே அறிவு பெருக வேண்டும். முன்னேற்றமடைய வேண்டும். மதம் சொன்ன காலத்திய முன்னேற்றமானது ஒரு தனிப்பட்ட சமூக முன்னேற்றமென்பது உலக முன்னேற்றமாகும். 'ரக்ஷகரே, ரக்ஷகரே' என்று வணங்கினார்கள்)

ஆகையால் மதங்களை மனத்திலிருந்து ஒழியுங்கள். மத ஸ்தாபனங்களை ஒழியுங்கள். மதச் சின்னங்களையெல்லாம் ஒழியுங்கள். மதங்களுக்குரிய அடையாளங்களையெல்லாம் ஒழியுங்கள்.

மதத்தை ஆதாரமாக உள்ள அந்தந்த ஸ்தாபனங்கட்குள்ள பணத்தையெல்லாம் திரட்டி உலக மக்கட்குப் பொதுவாக்குங்கள்.

கத்தோலிக்கரில் ஒருவன்: ரக்ஷகரே, கத்தோலிக்க ஸ்தாபனங்களின் பணத்தையெல்லாம் கத்தோலிக்கர்கட்குத்தானே பங்கிட வேண்டும்.

ரக்ஷகர்:— வடிகட்டிய முட்டாளே, மதப் பிரச்சினை தீர்ந்த பின் மக்கள் சமந்தானே!

பிராட்டஸ்டண்டுகளில் ஒருவன்:— ரக்ஷகரே, எங்கள் சக்கரவர்த்தி பிராட்டஸ்டண்டானபடியாலும், நீங்கள் பிராட்டஸ்டண்டுகளுக்கு அதிக அநுகூலரானதாலும் உங்கள் கிருபையால்தானே அவர் அந்தப் பதவியடைந்தார். அவரால் ஆன நன்மைகளை நாங்கள்தானே அடைய வேண்டும்!

ரக்ஷகர்:— அட, திப்பியைப் பற்றும் பன்னாடையே, அவன் பிராட்டஸ்டண்டு என்ற காரணத்தால் நான் அருள் புரிந்ததுமில்லை. சமதர்ம விரோதமாக நான் எந்தக் கூட்டத்திற்கும் எந்தக் காரணத்தாலும் கிருபை செய்வதில்லை. மதம் ஒழிந்தபின் ''உங்கள் சக்ரவர்த்தி'' என்பதற்கு அர்த்தமே யில்லை.

முற்காலத்தில் இறந்து போனதாகச் சொல்லப்படும், சேசுநாதர்தான் இவர் என்று ஒரு பொய் சொல்ல வாயெடுத்தேன். உதடு சுரீர் என்று பற்றியது.

வாயிலிருந்து சிகரெட் எரிந்து வந்து உதட்டைப் பொசுக்கியதும் சிந்தனையுலகிலிருந்து தள்ளப்பட்டேன். நான் மல்லாந்து படுத்திருப்பதையும், கையில் தினசரி வைத்திருப்பதையும், பெண்டு பிள்ளைகள் பக்கத்தில் மூட்டைப் பூச்சியால் நெளிவதையும் அறிந்தேன். கோழியும் கூவிற்று.

புதுவை முரசு, 21.3.1932

*

# 44
# அம்மியும் நகரும்!

'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' அல்லவா? சுயமரியாதைக்காரர் கூச்சல் வீணாகுமா? இது வரைக்கும் வீணாயிற்றா? சுயமரியாதை இதுகால பரியந்தம் என்ன செய்துவிட்டது என்று கேட்பவர் சுயமரியாதைக்காரரின் விரோதிகள் என்பதும் கண்டோமல்லவா? மேலும் நமதியக்கத்தை எதிர்க்கும் பல பத்திரிகைகளின் சுயமரியாதைச் சாயையுடையனவாக ஆகிவருதலை அறிஞர் நுணுகி அறிவாரல்லவா? மக்கள் சுபாவத்தின் எதிரொலி சுயமரியாதைக் கூச்சல் என்பது மறுக்கக் கூடியதல்லவே. மக்களின் உள்ளக் கிடக்கை என்னும் நெருப்புக்குச் சுயமரியாதை ஊதுகுழாயாம் என்ற உண்மையைச் சுயமரியாதைக்காரனைவிட ஆஸ்திகர் அதிகமாய் அறிந்துள்ளார். ஆகையாலல்லவா அவர்கள் அடிவயிற்றைப் பிசைத்துக் கொண்டு, 'ஐயோ!' என்று அலறுகிறார்கள்.

ஓடிக்கொண்டே இருக்கும் ரெயிலில் உட்கார்ந்திருக்கும் ஒருவன், தான் ஏறிப் போகும் ரயிலுக்குச் சக்கரமில்லை என்று சொல்லவே மாட்டான். ஆயினும் மனச்சாட்சியை மறைத்துப் பொய் சொல்ல நினைப்பவன் அவ்வாறு கூறவும் கூடும் அல்லவா? அதுபோலவே ஐந்து புலன்களாலும் சுயமரியாதையையே அடைந்து தன்னில் மாற்றமடைந்துவரும் ஆஸ்திகரும், ஆஸ்திக வால்களும் சுயமரியாதையைப் பொறாமை காரணமாக எதிர்க்கத்

தான் கூடும்; எதிர்த்து எழுதத்தான் கூடும். எதிர்த்துத் திட்டத்தான் கூடும். நம் கடமை என்ன? அடிமேல் அடி அடிப்பதுதான்.

புராண கதா காலக்ஷேபம் செய்யும் சுயநலக்காரர்கள் தமது காலக்ஷேபத்துக்கிடையில் சுயமரியாதைக்காரரை இழுத்துப் பேசாவிட்டால் சரிப்படுவதில்லை. ஆயினும் அதே உள்ளத்தில் தமது முட்டாள்தனமும் பிரதிபலிக்கத்தானே செய்கிறது. இதற்கு வருந்தலாமா? நம் கடமை என்ன? அடிமேல் அடிப்பதுதான். புரோகித நாய்கள் சுயமரியாதைக்காரனைக் கண்டு குலைக்காவிடில் திருப்திப்படுவதில்லை. அவர்கள் குலைப்பதின் மற்றொரு புறத்தைத் திருப்பிப் படித்துக் கொள்ளும் சக்தி பொதுமக்களுக்கு இல்லாமற் போகவில்லையே. சங்கராச்சாரிகள் என்பவர்களின் பழைய பேச்சுக்களின் பிரதிகள் இருந்தால் எடுத்துப் பாருங்கள். இப்போது குளறுவதையும் கவனியுங்கள். இப்போதைய பேச்சுக்களில் 'ஐயோ, எங்கள் கதி அநியாயமாய்ப் போகிறதே' என்ற மறைபொருள்தான் கிடைக்கும். சங்கராச்சாரி சுயமரியாதைக்கு எதிர்ப் பிரச்சாரம் பண்ணுகிறாரே என்றால், அதனால் என்ன முழுகிப் போய்விட்டது. சாகப் போகிறவன் சத்தம் போட்டுச் சாவதாலும், மறையும் காற்று மாட்டுக் கொட்டிலை இடிப்பதாலும் என்ன பிரமாதம் வந்துவிடப் போகிறது? கூச்சல் அதிகமாகவே இருக்கும்; அதிலும் இன்றைய நிலையில் கூச்சல் மிக்க அதிகமாயிருக்கும். ஆனால் நிச்சயமாய் இந்த அதிகக் கூச்சல் நமது வேலையிற் பாதியைப் பங்கிட்டுக் கொள்ளும்.

சுயமரியாதையின் புதிய திட்டம் செய்யத் துவக்கியிருக்கும் வேலையின் ஒளிச் சுவாலை கண்ணுக்குப் புலனாகத் துவக்கவில்லை. எதிரிகளின் குமுறல்கள் அதிகமாயிருக்கிறது என்பது சிலர் கருத்து. புதிய திட்டம் துவக்கி வெளி வந்த மறுதினமே செல்வர்கள், புரோகிதர்கள், மடாதிபதிகள் மூளையில் உழவுத் தொழில் நடைபெறுவது மறுக்க முடியுமா?

10000, 5000, 2000, 1000 என்ற முறையில் சம்பளம் வாங்குகிறவர்கள் 10, 20 சம்பளம் வாங்கும் ஏழை உத்தியோகஸ்தர் விஷயத்தில் காட்டிய மனப் பான்மை மாறுபடத் துவங்கி இருக்கிறது. பெரிய சம்பளக் காரர்கள் ஏழை மக்களை ஒடுக்கி வருவதற்காக நமக்கு இத்தனை சம்பளம் கொடுக்கப்படுகிறதல்லவா என்று உணர ஆரம்பித்திருக்கிறார்கள். ஏழைகளும் அந்த அதிகப் படியான சம்பளத்தைக் கோணற்பார்வை பார்க்க ஆரம் பித்துவிட்டார்கள். மடாதிபதிகளின் அட்டகாசம் ஏழை கள் கண்ணை உறுத்த ஆரம்பித்துவிட்டது. மடாதிபதி களும் அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும் என்று சுப்பிரமணியர் துதி ஆரம்பித்திருக்கிறார்கள். பெரிய மிராசுதாரர்களின் குமுறல்களைக் கொண்டே படிக்கத் தெரியாத உழவர்கள் விஷயம் தெரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். நாள் முழுதும் உழைக்கும் நமக் குக் கூலி ஆறணாவாம்; சோம்பேறி மிராசுதாரர்களுக்கு மார்பில் சந்தனமாம் என்பன போன்ற உத்வேகமான சண்டமாருதம் தலை காட்டிவிட்டது. 'இந்த நிலையில் சுயராஜ்யம் வந்தால் அது பணக்காரர்களுக்கும் புரோகி தக் கூட்டத்தார்களுக்கும் மடாதிபதிகளுக்கும் ஜமீன்தார் களுக்கும் நல்லதே தவிர, ஏழை மக்கள் என்ற பெரும் பான்மையோர் நிலையில் எள்ளத்தனை மாறுதலும் இராது' என்பது ஜனங்களுக்குத் தெரிந்தே வருகிறது. இதன் உண்மை சமீபத் தேர்தல் சமயத்தில் தெரியத் தான் போகிறது.

வட்டியில்லாமலும் ஏழைகட்கு எள்ளின் மூக்கத் தனைப் பயனில்லாமலும் சுமார் ஆயிரம் கோடி ரூபாய் கள் கோயில் பேராலும் குருக்கள் பேராலும் மதத்தின் பேராலும் வீணாய்க் கிடக்கின்றனவாமே! அடடா, அந் தப் பணங்கள் எல்லாம் இருந்தால் ஏழை மக்களே இல் லாமல் எல்லாரும் உண்ண உணவுக்கும் உடுக்க ஆடைக் கும் ஒண்டக் குடிசைக்கும் கஷ்டமின்றி வாழலாமே! மெய்தானடா அண்ணே! சுயமரியாதைக்காரர் சொல்லுவது

போல் இந்த காமாட்டிப் பசங்கள் ஏழைகளைத் தினம் தினம் ஏமாற்றி ஏமாற்றி எப்படியோ பணத்தைச் சேர்த்தார்களே ஒழியப் பாடுபட்டதும் இல்லை, படுவதுமில்லை, படப் போவதுமில்லை என்ற பெரும்பான்மை ஏழை மக்களின் அபிப்பிராயம் யாருக்கு அநுகூலமானது? ஆஸ்திகர்களுக்கு அநுகூலம் செய்யுமா? மடாதிபதிகட்கு அனுகூலம் செய்யுமா? நமது கடமை என்ன? மேற்படி அபிப்பிராயங்களுக்கு வத்தி வைத்துக் கொண்டே இருக்க வேண்டியதுதானே! முதலாளிகள் அம்மிகளாயிருக்கட்டும்; புதைத்த செக்குகளாயிருக்கட்டும். வேர்விடுமா? நகர்ந்து தானே தீரவேண்டும்!

தேசீயத்தைப் பார்த்தார்கள். அந்தத் தேசீயத்தை முன்னின்று நடத்திய தேசபக்தர்களைப் பார்த்தார்கள். ஏழை மக்கள் என்ன முடிவுக்கு வந்தார்கள்? கீர்த்தியோ லாபமோ படங்களோ அனைத்தும் முதலாளிகட்கும், பழைய மண்வெட்டியும் கூடையும் ஏழைகட்கு ஏற்படுவதை அறியாமலா இருக்கிறார்கள்? தேசபக்தப் பத்திரிகைகள் 'சி.பி. சாமியின் தியாகம்' என்று கொட்டை எழுத்தால் போடட்டும்! வாசிக்கும் மனிதர்கள் அதை நேராக வாசிப்பதை விட்டுத் தலைகீழாகப் புரட்டிச் சி. பி. அவர்கள் முன்பெல்லாம் 1000 ஏழையர் ரத்தத்தை உண்டு வந்தார். இப்போது பதினாயிரம் ஏழைகளின் ரத்தத்தைப் புனல் வைத்துச் சாய்த்துக் கொள்ளுகிறார் என்றுதானே வாசிக்கிறார்கள்.

அஞ்சுதல் வேண்டாம்! பின்செல்ல வேண்டாம்! ஜயம் உண்டு! நம் கடன் இடையறாது பணியாற்றலே!

குடியரசு, 26.3.1933; 7 : 1–3.

*

45

# அன்பே சிவம் என்பது ஆத்திகர் கரடி

சிவம் சிவம் என்று சொல்லிச் சொல்லி வயிறு வளர்த்த சோம்பேறி பசங்கள் சிவம் என்ற பதத்திற்கு வேண்டியவரைக்கும் கௌரவத்தை உண்டு பண்ணிவிட்டார்கள். சிவம் என்பது ஆக்க வல்லது, காக்க வல்லது, அழிக்கவல்லது. ஆகையால் அதற்குத் தரகர்களாகிய எங்கள் கால்களில் விழுங்கள். நீங்கள் பாடுபட்டதைக் கொண்டு வந்து கொடுங்கள். நாங்கள் விலாப்புடைக்க தின்று தின்று கொழுக்கிறோம். நரகத்துக்கும் மோக்ஷத்துக்கும் தலைமை வகிப்பது இதே சிவம்தான். ஆகையால் நரகத்திற்குப் போகாதிருக்க சிவத்தின் கூட்டத்திற்கு அடிமையாகி வாழுங்கள் என்றெல்லாம் சொல்லிச் சொல்லி நாளடைவில் நிலங்களையும் காசையும் சோம்பேறிகள் கைப்பற்றினார்கள். இதனால்தான் ஆரம்ப காலத்தில் பொதுவாக இருந்த உடைமையையும் ஒரு சாராரிடம் அடையலாயிற்று. இதனால்தான் பெரும்பாலான மக்கள் நாளடைவில் ஏழைகளாகித் தவித்தார்கள்.

ஆயினும் இந்த முதலாளிகள் காலக்கிரமத்தில் பெரும்பான்மைத் தொழிலாளரான ஏழைகட்கு அஞ்சத் தலைப்பட்டார்கள். ஏன்? கூட்டமாகக் கூடிவந்து தமது பசிக் கொடுமை நீங்குவதற்காக முதலாளிகளை உதைத்துப் பணத்தைப் பிடுங்கிக் கொள்ளவும் கூடுமல்லவா? இதற்காக முதலாளிகளாகிய ஆத்திகர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா?

தங்களில் கொழுத்த ஆட்களைப் பிடித்து அரசன் என்றும் படைவீரர் என்றும் ஒரு கூட்டத்தை உண்டாக்கி அந்தக் கூட்டத்துக்கு ஆயுதமும் கொடுத்து, அரசாட்சி என்பதன் பேரால் ஏழை மக்களிடமிருந்து தம்மைக் காத்துக் கொண்டார்கள்.

இதன் பிறகாவது முதலாளிவர்க்கத்திற்கு மன அமைதி ஏற்பட்டதா? இல்லை. ஏன்? நாம் ஏற்படுத்திய அரசர்கள் ஆள வேண்டும். நாடு பிடிக்க வேண்டும் என்ற பைத்தியத்தால், வெறி நாய்கள்போல சதா சண்டையிடலானார்கள். இந்தச் சண்டைகளால் தொழிலாளர்கட்கு கிராக்கி ஏற்பட்டது. சிறிது மதிப்பு ஏற்பட்டது. ஏன்? படைக்கு ஆள் வேண்டும், தொழிலுக்கு ஆள்வேண்டும். ஆகையால் இந்த அரசர்களால் நமது ஆத்திக ஏமாற்றுக்கள் முழுதும் காக்கப்படுமா? என்று பணக்காரர்களாகிய — சோம்பேறிகளாகிய தம்பிரான்கள் பயந்தார்கள். இதனால் அவர்கள் என்ன முடிவுக்கு வந்தார்களென்றால் பெரும்பாலான தொழிலாளர்களை நாம் தேகபலத்தால் முழுதும் அடக்கிவிட நினைப்பது முடியாத காரியம். ஆதலால் இவர்கள் மூளையில் மூட்டாள்தனத்தையும் கண்ணில் மிளகாய்த் தூளையும், தூர்த்துவிட்டால் சாஸ்வதமாக நாம் ஏழை மக்கள் உழைப்பால் வயிறு வளர்க்கலாம் என்று முடிவு கட்டினார்கள்.

பூர்வ ஜென்மத்தில் செய்த கர்மத்தின் பலன்தான் நீங்கள் ஏழையாக இருப்பது என்றும், அந்த ஏழ்மையை அனுபவித்துத்தான் ஆக வேண்டுமென்றும் பொதுமக்கள்பால் கரடிவிட ஆரம்பித்தார்கள். இந்த ஜென்மத்தில் ஏழையாக இருந்தாலும் பாதகமில்லை. மிச்சமீதியைக் கொண்டு பூணூல் திருடர், சடைமுடித் திருடர், கோயில் திருடர், அரசாங்கத் திருடர்களுக்குப் பூசை போட்டு வந்தால் அடுத்த ஜென்மத்தில் குளுகுளு என்று வாழலாம் என்பன போன்ற கயிறுகளைத் திரிக்க ஆரம்பித்தார்கள். இந்தக் காலத்தில்தான் பிரம்மா திடீரென்று

தோன்றி நான்கு வருணத்தையும் பிரசவ வேதனையின்றி முகம், புயம், தொடை, கால் ஆகிய இடத்தினின்று வெளிப்படுத்தித் தொழிலாளர்கள் கஞ்சிக்குக் கேடாக உழைக்கும் நிலையிலே இருக்க வேண்டும். சோம்பேறிகள் ஏமாற்றித் தின்னும் நிலையிலேயே இருக்க வேண்டும் என்ற பேதத்தை சாஸ்வதப்படுத்தினார். இப்படிப்பட்ட பிரச்சாரம் எவ்வளவு தூரம் வலிவடைந்து மக்களின் மூளையைக் கலக்கிவிட்டது எனில் ஏழுமலையான் பேரைச் சொன்னால் குடியானவன் பெண்டாட்டி தாலியறுக்கவும் முடிகிறது. திருப்பதியில் காணிக்கை போட்டபின் அதற்குப் பதிலாக பார்ப்பான் செருப்பால் அடிக்கையிலும், கோவிந்தா என்று தலையைக் குனிந்து காட்டும் நிலையும் ஏற்பட்டது. உலக மக்களில் 100க்கு 90 பேர் ஏழைகளாகவும் மீதிப்பேர் உலக உடைமைக்கு அதிகாரிகளாகவும் கால ரீதியில் ஆத்திகமும், அரசாங்கமும் செய்து கொண்டே வந்துவிட்டன. ஆயினும் ஏழை மக்களைக் கொள்ளையிடும் இந்தக் கூட்டத்தினர்க்குள்ளே நாளடைவில் சிறிது மனத்தாங்கல் உண்டாவது சகஜமாகும்.

ஏனெனில் ஆட்சி செலுத்துவோரிடம் படைபலம் இருப்பதால் கரடிவிடும் கூட்டத்தினராகிய புரோகிதர், குருக்கள், மடாதிபதிகள் ஆகியவர்களின் மதிப்பு குறைய ஆரம்பித்தது. இதனால் தாமே ஆட்சி செலுத்த வேண்டும் என்ற ஆசையும் பிறந்தது. எனவே தமது ஆத்திகச் சொக்குப் பொடியைப் படைபலம் கொண்ட ஆள்வோர் மீதும் தூவிவிடவும் கச்சை கட்டினார்கள். கடவுட் பிரச்சாரம், மத வழிபாடு, பெரியார் வழிபாடு, ஆத்ம சக்தி முதலிய வலைகளை ஓயாது வீசினார்கள். நாளடைவில் உலக மக்கள் ஒருவர் தவறாமல் அந்தக் கிணற்றில் விழுந்தார்கள். போப்புக் கூட்டமும், மடாதிபதிக் கூட்டமும், சங்கராச்சாரி கூட்டமும் இன்று உலகைக் குரங்குபோல் ஆட்டி வைக்கிறார்களா இல்லையா? உழைப்பு என்பதே கொஞ்சமும் இல்லாமலேயே கோடானுகோடி பணத்திற்கு, அதிகாரிகளாகவும், படைபலம் மிகுந்த ஆள்வோராகவும்,

அடக்கிப் பிடிப்பவர்களாகவும் விளங்குகிறார்களா, இல்லையா?

இதனால் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், ஏமாற்றுங் கூட்டமும், ஏமாறுங் கூட்டமும் உலக ஆரம்ப முதலே இருந்து வந்தன. ஏமாற்றுங் கூட்டத்தார் கருவியாக ஏற்படுத்திய கடவுள் கொள்கை மதக்கொள்கைகளும், புராதீனமானவைகளே. ஆயினும் ஏமாறுவோரிடம் சலுகை காட்டும் கட்சிகள் அவ்வப்போது தோன்றாமலும் இல்லை. அக்கட்சிகளில், 'பிறரிடம் அன்பு பாராட்டல்' என்னும் கொள்கையானது ஏமாற்றுக்காரருக்குச் சண்டமாருதம் என்று தோன்றியிருக்கலாம். ஏனெனில் அந்த வார்த்தை ஏழை மக்களையெல்லாம் ஒன்றுபடுத்திவிடும் என்று அவர்கட்குத் தெரியும். அதனால் அன்புப் பிரசாரத்தை எதிர்க்காமல் அதைத் தாமே மேற்போட்டுக் கொண்டார்கள்.

அன்பு நெறியை ஓங்க விட்டார்களா? அதை வேரோடு கிள்ளிப்போட்டார்கள். எப்படி? கொள்ளைக் கூட்டத்திற்கு முதலாளி வர்க்கத்திற்கு ஆதரவு தந்து வரும் கடவுள் அன்பின் உருவமாயிருக்கிறார்கள். அன்பே சிவம் என்று சொல்லிவிட்டார்கள். அது முதற்கொண்டு தான் இந்தப் பாழான உலகத்தில் அன்பு என்பது ஏழை மக்கள் முதலாளிகளிடமும், கடவுளிடமும் காட்டுவது தான் என்று முடிந்தது. பணக்காரன், புரோகிதன், அரசாங்கம் ஆகிய இந்தக் கூட்டம் எப்போதாவது ஏழை மக்கள்பால் அந்த அன்பைச் செலுத்தினதாக எங்காவது, யாராவது காண்பிக்க முடியுமா? ஆத்திகர் விட்ட கரடிகளில் அன்பே சிவம் என்பது அசல் கரடியாகும்.

குடி அரசு, பக். 11–12, 9–4–1933

*

## 46
# தமிழர்கள் நசுக்கப்பட வேண்டும்!

தமிழருக்குப் புரட்சி மனப்பான்மை அவர்கள் தங்கள் பகைவரால் நசுக்கப்படுவதிலிருந்து உண்டாகும். ஆகையால் தமிழர் தம் பகைவரால் அடையும் எவ்விதத் தொல்லையையும் நான் வரவேற்கின்றேன்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே தமிழர் சீரழிந்து வருகின்றனர். அவர்களின் சீரழிவுக்குக் காரணம் இன்னதுதான் என்று அறிந்து வந்தும், அவர்களின் மிதமிஞ்சிய ஆஸ்திகப் புத்தியானது அந்தச் சீரழிவும் நல்லதே என்று திருப்தியடைய வைத்தது.

அளவு கடந்த கடவுள் வழிபாடு, அதிலிருந்து அதே வீதத்தில் அரச வழிபாடு, அதிலிருந்து எடுத்ததற்கெல்லாம் பயம், பின்னர் சுயநலம்—இந்த நோயில் ஆதியிலிருந்தே தமிழர்களை அழுத்தி வந்தனர் தமிழர்களின் எதிரிகள். ஆதி முதல் தமிழர்க்கு எதிர்த்துப் போராடும் சக்தி உண்டாக அவர்கள் நெஞ்சுக்கு ஒரு நிமிஷ நேரமும், விடுதலை இருந்ததில்லை. வஞ்சத்தால் செல்வாக்கடைந்த மூளை, திரைமறைவில் வேலை செய்யும். அதன் விளைவாக பகிரங்க எதேச்சாதிகாரம், தூக்குமரம், சித்ரவதைகள் இவைகளைக் கண்டபின்னும் அரச வணக்கம்! வறுமையிற் செம்மை — இந்த நம்பிக்கை! அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற ஐயம்! நெஞ்சு பஞ்சு படும்பாடு! நரம்புகள் துடைப்பக் குச்சி.

சென்ற நூற்றாண்டில்தான் இந்த ஏமாந்தவர்! மேலும் ஏமாற்றுகிறவர்! மேலும் ஆதிக்கம் செலுத்த மூன்றாவது வர்ணம் இந்தியாவில் குதித்தது. இதனால் தமிழர் தம் நிலையை அறிய சிறிது வெளிச்சமும், தமிழ ரின் எதிரிகட்குத் தமது தந்திர சூழ்ச்சிகட்குத் தக்க லாபமும் ஏற்படலாயின.

இப்போது தமிழர் அத்தனை மோசம் இல்லை. காதைப் பிடித்துத் தூக்கினாலும், இப்போது தமிழன் தன் சகிப்புத் தன்மையை விட்டுக் கீ என்று கத்துகிறான்.

தமிழரின் எதிரிகள் இப்போது ஒரு தப்பு செய்திருக் கிறார்கள். அவர்கள் நினைப்பு:--

அரச வணக்கம், அதிகாரி வணக்கம், பயம், சுய நலம் இவைகள் இன்றைக்கும் தமிழனின் நிரந்தரச் சொத்து.

அந்தக் காலத்தில் தமிழரின் தமிழ்க் கலைகளை யெல்லாம் மாய்த்து அவைகளைக் கடல் கொண்டு போன தாகத் தமிழர்களைக் கொண்டே சொல்லி வைக்க அதை நம்பினார்கள்.

தமிழச்சி ஒருத்தியைச் சரிப்படுத்திக் கொண்டு 8000 தமிழர்களை நமது மூதாதைகள் படுகொலை செய்து முன் னேறவில்லையா?

தமிழைப் புகழ்வதன் மூலம் தமிழர் தலைகளைப் பலியேற்க நினைத்ததில் இன்றுவரை வெற்றி!

தேசத்தை அயலானிடம் காட்டிக் கொடுத்ததிலும், அதனால் சிறுபான்மையோராகிய நாம், சுகபோகத்தைக் காத்துக் கொண்டதிலும் வெற்றிமேல் வெற்றி!

சில ஆண்டுகளாகக்கூட தமிழர்களுக்குத் தைத்த குல்லாய்களுக்குத் தமிழர் மூக்கைப் பிடித்துக் கொண்டு தானே தலை தாழ்த்தினார்கள்.

காசை பிடுங்கிக்கொண்டு காற் செருப்பைக் காட்டும் ஆளுக்கு எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

என்று சொல்லும் இருட்டில்தானே தமிழர் குடித்தனம் பண்ணுகிறார்கள்!

வந்தால் அரச போகம்! இல்லாவிடில் சென்னைக் கந்தசாமி கோயில் வீதியில் மூன்றணாவுக்கொரு பித்தளை செம்பு! பார்ப்போமே ஒரு கை?

எதிரிகளின் இந்தச் சிந்தனைகள், காலந் தவறியவை என்பதே எனது அபிப்பிராயம்.

தமிழரை வஞ்சித்து வஞ்சித்து, அவர்களின் ஒற்றுமையைக் கலைத்துக் கலைத்து, நலி செய்து நலி செய்து பழகிய அந்த எதிரிகள் இன்று தமிழரின் மண்டையை நோக்கி ஓச்சிய கோட்டடிதான் ஹிந்திக் கட்டாயப் படிப்பு! அநேகமாக இன்று தமிழரால் ஓர் புரட்சி ஏற்படலாம். நலிந்த ஒரு தனி மனிதன் செத்துப் போவான். ஆனால் நலிந்த ஒரு ஜாதி சாகா எழுச்சியுறும். இது இயற்கைச் சட்டம்! எனது இன்பக் கனவு.

குடி அரசு, பக். 17, 10-10-1937

*

## 47
# பிள்ளை பேறுவது கடவுளாலா?

'கடவுள் சிருஷ்டிக்கிறார் எல்லாவற்றையும். எல்லாம் எப்போதும் கடவுளால் சிருஷ்டிக்கப்படுகின்றன' என்கிறாய் தோழா! உன் வீட்டில் நேற்றுப் பிறந்த குழந்தையையும் அவர்தாம் சிருஷ்டித்தார். எவை உன் கண், காது முதலியவற்றிற்குப் புலனாகி விட்டனவோ அவைகளெல்லாம் 'கடவுள் சிருஷ்டி' என்று கண்ணை மூடிக்கொண்டு எழுதி விடலாம். ஆனால் நீ ஒரு விஷயத்தில் தவறிவிடாதே! ஒன்று தோன்றிய பின்புதான் அது 'கடவுள் சிருஷ்டி'! தோன்றாத முன்பு அது தோன்றுவதற்கு முன்னறிவிப்பு, கடவுள் சிருஷ்டியில் இல்லை. தோற்றுவிக்குமுன் தெரிவிக்க வேண்டியது கடவுள் பொறுப்பாய் இருந்தால், அதைத் தோற்றுவிக்கக் காரணத்தைச் சொல்ல வேண்டிய பொறுப்பு கடவுளுக்கு ஏற்பட்டுவிடும். அதன் பிறகு கடவுள் ஏற்பாட்டின் குட்டு வெளிவந்துவிடக் கூடுமல்லவா?

உன் வீட்டில் பிறந்த குழந்தை கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது என்று மேலே சொன்னேனல்லவா? நீயும் 'ஆம்' என்று நம்பினாய்.

ஆகவே உன் வீட்டில் பிரசவ அறையில் கடவுளால் ஒரு குழந்தை சிருஷ்டிக்கப்பட்டதல்லவா? முதன் முதல் உன் வீட்டில் பிரசவ அறையில் உன் குழந்தையைக் கண்டாய், அதை உன் மனைவியின் அண்டையில் தான் பார்த்தாய். அப் பிள்ளையை ஈன்றவள் யார் என்பதை நீயறிவாய். அவள் அதை ஈன்றெடுக்க உனது சம்

பந்தம் இருந்தது என்பதையும் நன்றாய் அறிவாய்! ஆயினும் அக் குழந்தையை உண்டாக்கியவர் மாத்திரம் கடவுள் என்பதுதான் உனது நம்பிக்கை. சந்தோஷம் தான்! உன்னுடைய இந்த நம்பிக்கை எந்தச் சந்தர்ப்பத்திலும் மாறாதிருக்க வேண்டும். ஆனால் அதே பிரசவ அறையில் இன்னொரு நாள் தகவலில்லாமல் இன்னொரு பிள்ளையை நீ கண்டாயானால், அது மற்றொருவன் பெற்றதென்றும், வளர்க்க முடியாமல் என் தலையில் கட்ட நினைத்து இருக்கிறான் என்றும், நான் இதைப் பெறவில்லை என்றும் நீ சொல்வாய் என்பதிற் சந்தேகம் இல்லை. இது மாத்திரமா? கடவுள் என்பதாக ஒன்று வந்து உன் காதில், 'அந்தப் பிள்ளை நமது சிருஷ்டி; ஆகையால், அதை நீ ஒப்புக் கொள்' என்று சொன்னாலும், 'முடியாது, முடியாது; அது நான் பெற்றதல்ல, நான் பெற்றது எனக்கிருக்கிறது!' என்றுதான் சொல்லுவாய் என நம்புகிறேன். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் நீ அப்படிச் சொல்லுவது சரியாக இருக்கலாம். ஏனென்றால், உன்னால் ஏற்பட்ட பிள்ளைக்கு உன் சொத்துச் சேரவேண்டியதும், உன் பிள்ளைக்காக நீ உழைப்பதில் நீ குஷால் அடைவதும் ஞாயம். ஆனால் ஒன்று! நீயும் உன் மனைவியும் உண்டாக்கிய உனது பிள்ளை கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது என்று நீ முன், நம்பியதான்து இவ்விடத்தில் ஆட்டங்கொடுக்க வில்லையா? ஆனால் உன் சொத்து, ஸ்வாதீனம் ஆகிய நன்மையைப் பாதிக்காத முறையில் மேலோடு உன் பிள்ளையைக் 'கடவுள் சிருஷ்டி' என்று நீ சொல்லுவதில் ஒன்றும் ஆக்ஷேபணையில்லை.

நீயும், உன் மனைவியும் உண்டாக்கிய பிள்ளையைக் கடவுள் உண்டாக்கியது என்று நீ அங்கு தடையின்றி கூறுவதற்குப் பிரதான காரணம் மற்றொன்று உண்டு. நீ தந்த பிள்ளையை இன்னொருவன் தந்தான் என்று இன்னொரு அறிந்த மனிதனைக் குறிக்கும்போது உனக்குக் கோபம் பொங்குவதும், அதை நீ மறுக்க முற்

படுவதும் ஞாயம்! ஆனால் 'கடவுள் தந்தார் இந்தப் பிள்ளையை' என்று அறியாததான ஒரு கடவுளைப் பற்றிக் கூறுவதால் கோபமில்லை; நீ அதை மறுக்க முற்பட வேண்டியதில்லை. ஏன்! கடவுள் என்பது க—ட—வு—ள் என்பது மாத்திரமே என்பது உனக்குத் தெரியும். ஒரே ஒரு வார்த்தை! எதையும் படைத்த கடவுள், மக்களைப் படைத்த கடவுள், உன் பிள்ளையைப் படைத்த கடவுள், சொன்னாலும் சொல்லாவிட்டாலும் சகலத்தையும் சிருஷ்டித்துக் கொண்டேயிருக்கும் கடவுள் இருக்கிறாரல்லவா? அவர், நீயும், உனது மனைவியும் சம்பந்தமற்றிருக்கும் காலத்தினிடையில் உன் வீட்டுப் பிரசவ அறையில் ஒரு பிள்ளையைச் சிருஷ்டித்துப் போட்டு விடுவாரேயானால் அதே நேரத்தில் என்னைக் கூப்பிடு; அப்போதுதான் 'கடவுள் சிருஷ்டியா' என்ற தொடர் மொழிக்கு அர்த்தம். கடவுள் மனிதரின் சிருஷ்டியா? மனிதன் கடவுளின் சிருஷ்டியா? என்ற இரண்டிலொன்றை நான் நிச்சயித்துவிட உத்தேசம்.

பகுத்தறிவு, மார்ச், 1970
மலர்–1; இதழ்-3.

*

# 48
# காலிகள்

தமிழ் நாட்டில் தமிழர்கள் எல்லாம் காலிகள், சுய மரியாதைக்காரர்கள்! படித்தவர்கள் எல்லாம் காலிகள்— ஆரியர் பஞ்சாங்கப்படி! வட நாட்டில் வங்காளத்தில் இருக்கும் போஸ் கட்சிக்காரர்கள் எல்லாம் காலிகள், முஸ்லீம்கள் எல்லாம் காலிகள், ஆதித் திராவிடர் அனைவரும் காலிகள்—காந்தீயர்களின் அட்டவணைப்படி.

ஆந்திர தேசத்தில் ஆந்திர மாகாணம் கேட்பவர்கள் அனைவரும் காலிகள் — ஆச்சாரியார் அகராதிப்படி!

இது மாத்திரமல்ல, காரே போன்ற நீதிமான்கள், அவர்கள் கட்சிக்காரர்கள் எம்.என். ராய் போன்றவர்கள், அவர்கள் கட்சிக்காரர்கள், சுதேச அரசர்கள், அவர்களை ஆதரிக்கும் மக்கள் அனைவரும் காலிகள் - காந்தியின் ஜோதி சொன்னபடி.

திருவாங்கூர் காங்கிரஸ்காரர்கள் காலிகள், கொச்சி திவான் ஒரு காலி-விகடன் திட்டத்தில்!

மறியல் செய்பவர் காலிகள், பட்டினி கிடப்பவர் காலிகள் - படேல் நியாயப்படி.

வரியை எதிர்ப்பவர்கள் காலிகள் - மூர்த்தியின் எண்ணப்படி.

இந்தியை எதிர்ப்பவர்கள் காலிகள், கொடிய சட்டங்களை வெறுப்பவர்கள் காலிகள், நீதி நிர்வாகப் பிரிவினை கோருபவர் காலிகள் - ஆச்சாரியார் நீதி சாஸ்திரப்படி.

காங்கிரஸுக்கு எல்லாரும் காலிகளாய்த் தெரிவதால் இனிக் காங்கிரஸ் காலிதான் போலிருக்கிறது.

*தமிழரசு, 15-2-1939*

## 49

# எழுத்துச் சிக்கனம்

உயிர் 12, மெய் 18, உயிர்மெய் 216, ஆய்தம் 1.

இத்தனை எழுத்துக்கள் தமிழில் இருப்பதால் மிகத் தொல்லையாய் இருக்கிறதென்று கூறுகிறார்கள்.

அவர்கள் கூறுவது சரிதான். எழுத்துக்களின் வரி வடிவத்தைக் குறைக்க வேண்டும் என்கிறார்கள். 'ஆம்' என்று நாமும் கூறுகிறோம்.

வரி வடிவங்களைக் குறைக்க வேண்டிய முறையைப் பற்றிப் பலர் பலவாறு கூறுகிறார்கள். கூறுகிறவர்கள் எல்லாம் பொதுநலங் கருதியே கூறுகிறார்கள். அதில் இம்மியும் ஐயமில்லை.

தமிழ் டைப்ரைட்டிங் மெஷினில், மிகப் பல எழுத்துக்கள் அமைக்க வேண்டியிருக்கிறது. அதனால் அந்த மெஷின், மற்றவைகளைவிட மிகப் பெரிதாகி விடுகிறது. அச்சுக் கூடத்தில் எழுத்துப் பெட்டிகளின் அறைகளோ மிகமிக; ஒரே திண்ணையளவு பெரியதாக அமைய வேண்டியதிருக்கிறது.

கை, ஊ என ஒரே இனத்தில் இரண்டு வகை. கை என்பது போலவே ளை என்றும் இருந்தால் என்ன முழுகிவிடும்? க. இது குறில். கா. இது நெடில். ஆனால் உ இது குறில், ஊ இது நெடில். இத்தனை தொல்லை? உ குறில் உா நெடில் என்றால் ஏன் பொருந்தாது? இப்படிச் சிலர் கேட்கிறார்கள்.

து இது குறில்; தூ இது நெடில். து இது குறில் தூ இது நெடில் என்றால் ஏன் பொருந்தாது— இப்படிச் சிலர் கேட்கிறார்கள்.

எழுத்தின் வரி வடிவத்தைச் சிக்கனப்படுத்தும் முறை பற்றி உங்கள் கருத்தென்ன என்று சிலர் நம்மைக் கேட்டார்கள். குயிலில் சொல்லுவதாகச் சொன்னோம்.

சொன்னோம். சொல்லுகிறோம். ஆயினும் நம் கருத்தை யாரும் ஒப்பமாட்டார்கள். ஒப்ப மாட்டார்கள் என்பதற்காக நாம் சொல்லாமல் இருப்பதுண்டா?— கிடையாது.

நாம் சொல்லும் முறையைக் கையாண்டால்—டைப் ரைட்டிங் மெஷினிலும் எழுத்துப் பெட்டி அறைகளிலும் 31 எழுத்துக்கள் போதும். ஒத்துக் கொள்ளுகிறவர்களின் நிலைமைதான் சரியாயில்லை.

க என்பது ஓர் எழுத்தல்ல. க் என்பதும் அ என்பதும் சேர்ந்தது க. இப்படியேதான் உயிர்மெய் 216ம்.

பை என்பது ஓர் எழுத்தல்ல. ப் என்பதும் ஐ என்பதும் சேர்ந்ததுதான் பை.

க என்று ஓர் எழுத்து வேண்டாம். க் அ என்றே குறிக்கலாம் என்கிறோம்.

கண்ணன் என்று எழுத வேண்டுமானால் க்அண் ண்அன் என்று குறிக்க.

விசிறி என்பதை வ்இச்இற்இ என்று குறிக்க வேண்டும். இந்த முறையை மேற்கொண்டால் உயிர் 12, மெய் 18. ஆய்தம் 1 ஆக 31 எழுத்துக்கள் போதும். எல்லாவற்றையும் எழுதி விடலாம். இந்த 31 எழுத்தால், இப்படி எழுதுவதால் ஒரு வரியில் மிகப்பல எழுத்துக்கள் போட வேண்டும் என்று கூறலாம். அப்படியில்லை. சில எழுத்துக்களே அதிகமாகின்றன.

வழக்கத்தில் வருவது முடியாது என்று கூறலாம். வழக்கத்தில் வருவது இலேசு என்று தோன்றுகிறது.

அஃது — பெரிது — ஆயினும் — எளிது என்பதை அஃத்உ — ப்எர்இத்உ — ஆய்இன்உம் — எளிஇத்உ என்று எழுதுக. சில நாட்கள் தொல்லையாக இருக்கும். பிறகு எளிதாகிவிடும்.

இங்கிலீஷிலும் பிரஞ்சிலும் இப்படித்தானே. பு என்பதை இங்கிலிஷில் Pu என்றுதானே போடுகிறான். பிரஞ்சிலோ அவளப்பன்! Pou என்று மூன்று எழுத்துக்கள் போடவேண்டும்.

## எழுத்துச் சிக்கனம் (2)

உயிர் 12, மெய் 18, ஆய்தம் 1. ஆக 31 எழுத்தைக் கொண்டே எழுத்துக் குடித்தனத்தைச் சிக்கனப் படுத்தலாம் என்று கூறினோம்.

ஒரு தோழர் தெரிவிக்கிறார். 'நீங்கள் சொல்லிய வழி ஏற்றது. அதனோடு, ஆ என்பதை அா என்றும் ஈ என்பதை இா என்றும்...சுருக்கலாம்' என்கிறார். செய்யலாம் என்கிறோம் அப்படியே.

அதன்படி,

'ஈவது விலக்கேல்' என்பதை இாவ்அத்உ வ்இல்அக்க்எால் என்று எழுதுக.

குயில், 15-5-48, 15-6-48

*

# 50

# அடி; நொறுக்கி விடு

இரண்டு வயதுள்ள குழந்தை.

எழுந்தால் விழும்; விழுந்தால் அழும்.

அக் குழந்தை அப்பா ஏதாகிலும் வாங்கி வருவார் என்று பார்த்திக்கிருறது.

அப்பா வரவில்லை. குழந்தைக்கு மனசில் வருத்தம், எரிச்சல்! அப்பா வந்துவிட்டார். ஒன்றும் வாங்கிவர வில்லை.

குழந்தை தன் அப்பாவின் காலைப் பற்றிக்கொண்டே எழுகிறது. தன் இரண்டு கைகளாலும் அப்பாவின் துடையைப் பிடித்துக் கொள்கிறது. தன் காலால் அப்பாவை உதைக்கிறது.

திராவிடனே! இன்று உன்னை உதைக்க நினைப்பவன் உன் குழந்தையல்ல; உன் காலைப் பற்றிக் கொண்டே உன்னை உதைக்க நினைக்கிறான். அடி! நொறுக்கிவிடு, அவனை!

*

# 51
# குள்ள நரியின் குதிப்புக்கு மறுப்பு

'பார்ப்பனர் அல்லாதவர் அனைவரும் திராவிடர் என்பது சரியல்ல.'-இது முற்போக்குப் பார்ப்பனர் மாநாட்டில் முற்போக்குப் பார்ப்பனர் சொன்னது. இதற்குக் காரணமும் கூறினார்கள். அந்தக் காரணம் என்னவெனில், ''இப்போதும் பார்க்கலாம் பம்பாயில் சில பார்ப்பனக் குடும்பங்கள் தம்மைத் திராவிடர் என்றே கூறிக் கொள்வதை'' காரணம் சொல்லிவிட்டார்கள். பார்ப்பனர் அல்லாதவர் திராவிடர் அல்ல எனில் வேறு எவர்? — கூறவில்லை. இருக்கட்டும். பார்ப்பனர் எவர் என்பதையாவது பார்ப்பனர் மாநாடு கூறியதா? கூறவில்லை. பம்பாயில் சில குடும்பங்களைப் பற்றி நாமும் கேள்விப்பட்டதுண்டு. ஆம், அவர்கள் தங்களைத் திராவிடர் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். சொல்லிக் கொள்ளுகிறார்களே தவிர பார்ப்பனீயத்தைச் சேர்ந்தவர்தான் மேற்கொண்டு வாழ்கிறார்கள்.

ஏன் வடநாட்டில் தம்மைத் திராவிடர் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள் பார்ப்பனர்?

முன்னாளிலும் பம்பாயில் திராவிடர் என்றால் வீரர் என்பது கருத்து. தர்ப்பைகளுக்கு வீரர் பட்டம் சுலபமாகக் கிடைப்பதை ஏன் விடவேண்டும். தென்னாட்டை விட்டுப் பிழைக்கப்போன இடத்தில் ஒரு பேச்சு—நாங்கள் திராவிடர்—

இப்போதுகூட மலையாளத்திலிருந்து இங்கு வந்து சாப்பாட்டுக் கடை வைக்க எண்ணுவோர் அனைவரும் தம்மை நாயர் என்று கூறிக் கொள்வதில்லையா, நாயரில் லாதவர்கூட? பிழைப்புக்காக! சில நாளின் முன்பு சில பார்ப்பனர், தாங்களும் தமிழரே என்றார்கள். முற்போக் குப் பார்ப்பனர் அப்படிக் கூறவில்லை. ஏன்? பார்ப்பனர் களுக்கு எல்லாம் கையில் வந்துவிட்டதே! ஏன், தம்மைப் பார்ப்பனரும் தமிழரே என்று ஒன்றுபடுத்திக் கொள்ள வேண்டும்?

முற்போக்குப் பார்ப்பனர் மாநாட்டினர் இராஜகோபா லாச்சாரி, கோபாலசாமி ஐயர் முதலியவர்களின் திறமை யைத் தமது சாதிப் பெருமையாகப் பேசியிருக்கிறார்கள். மகாகவி சுப்பிரமணிய பாரதியைச் சொல்லவில்லை. ஏன் தெரியுமா? அவர் பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே என்றார். சூத்திரனுக்கொரு நீதி, தண்டச் சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி என்றார். பாரதியாரின் கருத்துக்களுக்கு மாறாக, அறத்திற்கு மாறா கப் பேசிக் கூத்தடிப்பவர் பாரதியாரை நமக்கு நினைப் பூட்டவும் ஒப்பாரல்லவா?

திராவிடக் கழகத்தார் நினைத்திருந்ததெல்லாம் இதைத்தான் — பார்ப்பனர் நேரே வெளிவர வேண்டும். தம்மைத் தமிழர் என்கிறார்கள். ஆரியர் இல்லை என்கி றார்கள். ஆரியரே நாங்கள் என்கிறார்கள். குழப்பிக் குழப் பிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பெருமக்களை ஏமாற்று கிறார்கள். முற்போக்குப் பார்ப்பனர் கூட்டத்தைத் திரா விடர் கழகம் வரவேற்கிறது. ஓர் ஐயப்பாடு என்னவெனில், பிற்போக்குப் பார்ப்பனர் என ஓர் அனாமத்துக் கூட்ட மும் இருக்கிறதோ? அது எது? சரியான முகவரி இருந் தால் மிக்க நலம்.

நான் சொல்ல நினைத்ததை இன்னும் சொல்ல வில்லை. பார்ப்பனர் அல்லாதவர்கள் அனைவரும் திரா விடர் என்று திராவிடர் கழகம் சொல்லவில்லை.

பார்ப்பனர் என்று சொல்ல முடியாமலும் திராவிடர் என்று சொல்ல முடியாமலும் ஏதுங்கெட்ட நிலையில் ஒரு கூட்டம் இந்நாட்டில் உண்டு என்பதைத் திராவிடர் கழகம் உணர்ந்திருக்கிறது.

பார்ப்பனர் என்பவர் உலகின் நன்மையைப் பார்ப்பவர் என்று கூறுகிறார்கள். உலகின் நன்மையைப் பார்ப்பதைவிட்டு தன்னலத்தையே பார்க்கும் கூட்டம் இருக்கிறதல்லவா — அது திராவிடர் கூட்டமன்று; பார்ப்பனர் கூட்டமும் அன்று.

வேதமுணர்ந்தவன் பார்ப்பான் என்கிறார்கள். பார்ப்பனன் என்று கூறிக்கொண்டு வேதமும் தெரியாத கூட்டம் ஒன்று இருக்கிறதல்லவா? அது திராவிடர் கூட்டமுமில்லை. பார்ப்புக் கூட்டமுமில்லை.

பிழையாக வேதம் ஓதும் பார்ப்பானைவிடச் சிரைப்பவன் மேல் என்கிறார்கள். பார்ப்பனர் என்று தம்மைச் சொல்லிக் கொண்டு பிழையாக வேதம் ஓதும் கூட்டமும் இருக்கிறதல்லவா? அது தி. கூட்டமும் அல்ல; பா. கூட்டமுமல்ல.

தொழில் விவசாயம் முதலிய துறைகளில் காலை வைப்பவன் பார்ப்பானில்லை என்கிறார்கள். கருவாடு ஏற்றுமதி செய்து கொண்டே தம்மைப் பார்ப்பனர் என்று கூறும் கூட்டமும் இருக்கிறது. அது தி. கூட்டமுமல்ல; பா. கூட்டமுமல்ல.

இந்த ஏதுங்கெட்ட கூட்டத்தின் ஏய்ப்பு நிலைமையை எதிர்த்து மீள்வதுதானே திராவிடரின் பெரிய வேலையாயிருக்கிறது. மற்றபடி திராவிடர் என ஓர் இனம் இருப்பதைச் சில மடப்பயல்கள்போல இந்த முற்போக்குப் பார்ப்பனர் மறுக்கவில்லை. அந்த மட்டும் மகிழ்ச்சி.

இன்னொரு மகிழ்ச்சி. நேரே வெளிவந்து விட்டார்கள் முற்போக்குப் பார்ப்பனர். திராவிடர்மேல் நேரடி

நடவடிக்கை தொடங்க வேண்டியதுதான் பாக்கி. தொடங்குவோம் என்றுகூடக் குறிப்புக் காட்டியிருக்கிறார்கள். முற்போக்குப் பார்ப்பனரிடம் நமக்கு இன்னொரு மகிழ்ச்சி.

இத்தனை நாள் நாங்கள் செய்தது குள்ள நரி வேலை. நல்ல அலுவல்களை அடைந்து கொண்டோம். செல்வ நிலை பெற்றுள்ளோம். இனி எங்கள் முகவரியைக் கூறிக் கொண்டே எதிர்ப்போம் என்கிறார்கள். திராவிடர் கழகம் சொல்லுகிறது: 'உன்னால் ஆனதைப் பார். பறிக்க முடிந்தால் பறி. ஏமாற்ற முடிந்தால் ஏமாற்று. தர்ப்பைக் கையில் கத்தியைத் தூக்க முடிந்தால் தூக்கு. செய்ய முடிந்தால் செய்.'

குயில், *15–5–1948*

# 52
# தமிழன் யார்?

தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவன் தமிழன். ஒருவன் தமிழ் பேசுகின்றவனாகலாம். தமிழ் படித்திருக்கலாம். அவன் தமிழனின் அண்டை வீட்டுக்காரனாக இருக்கலாம். இக்காரணங்களைக் கொண்டு அவன் தமிழன் என்று கொள்வது பெரும் பிழையாகும். அவனை நோக்கி உனது தாய்மொழி எது என்று கேட்டால் அதற்கவன், என் தாய்மொழி சமஸ்கிருதம் அல்லது இந்தி அல்லது பிரான்சு அல்லது ஆங்கிலம் என்பானானால் அவனைத் தமிழன் பட்டியலில் சேர்ப்பது இழுக்கு.

தமிழ்நாட்டைத் தாய் நாடாகக் கொண்டவன் தமிழன். ஒருவன் ஆயிரமாண்டுகளாகத் தமிழ் நாட்டில் இருந்து வரலாம்; அவன் தமிழன் என்று சொல்லிக் கொள்ளலாம். அவன் தமிழ்நாட்டில் தன் புகழை நாட்டியிருக்கலாம். தன்னை நோக்கித் தமிழரை மிதித்துக்கொண்டிருக்கும் பகை நாட்டின் செயல் அறமா என்று கேட்டால் அறமே என்பான். தான் என்ன நினைக்கின்றான்? தமிழனுக்குப் பகை நாட்டினனாயிருந்தாலும் நம்மை ஆதரிக்க நம்முறவு நாட்டான்தானே என்று எண்ணுகின்றான்.

தமிழ்நாடு விடுதலை பெற வேண்டும் என்று தனி இயக்கம் கொண்ட என் நண்பர் ஒருவர் இரண்டாவது உலகப் போர் நடந்தபோது சென்னையில் இருந்த வடநாட்டார், தம் வடநாட்டை நோக்கி ஓடிவிட்டார்கள். அப்போதும் தென்னாட்டை விட்டுப் பார்ப்பனர் ஓடவில்லை. ஆதலால் பார்ப்பனர் தமிழரே என்று கூறினர்.

நண்பர் முடிவு தீய விளைவுக்குரியது. புறாப்பண்ணையை விட்டுக் கழுகு நகரவில்லையானால் கழுகு புறாவாகி விடாது.

இனி, தமிழருக்குரிய அடிப்படை ஒழுகலாறுகள், வாழ்க்கையில் இயற்கையாய் அமையப் பெற்றவன் தமிழன். தமிழரின் ஒழுகளாறுகளில் சில வருமாறு:—

ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்பது தமிழர் ஒழுக்கம்.

> திருமகன் அருளப் பெற்றுத்
> திருநிலத் துறையும் மாந்தர்
> ஒருவனுக்கு ஒருத்தி போல
> உளமகிழ்ந்து ஒளியின் வைகிப்
> பருவரு பகையும் நோயும்
> பசியும் கெட்டொழிய, இப்பால்
> பெருவிறல் வேந்தர் வேந்தற்கு
> உற்றது பேசலுற்றான்.

—சீவக சிந்தாமணி-2377

என்ற செய்யுளில், 'ஒருவனுக்கு ஒருத்திபோல உளமகிழ்ந்து' என்ற தொடரை நோக்குக! ஒருத்தி ஒருவனையே மணக்க வேண்டும் என்பது பெறப்படுகின்றது. ஒருத்தி ஆடவர் பலரை மணப்பதும் உலகில் உண்டோ என்று கேட்கலாம். உலகில் என்ன? தமிழ்நாட்டிலேயே கோயில் கொண்டெழுந்தருளியுள்ள திரெளபதி எப்படி? அவள் ஐவரை மணந்தவள். அதனால் பெரும் பழிப்பை ஏற்றவர் அல்லரோ இவர். அதனாலன்றோ,

> படுபழி மறைக்கல் ஆமோ
> பஞ்சர் அன்று பெற்ற
> வடுஉரை யாவர் பேர்ப்பார்?
> வாய்ப்பறை யறைந்து தூற்றி

இடுவதே யன்றிப் பின்னும்
இழுக்குடைத் தம்ம காமம்
நடுவுநின்று உலகம் ஓம்பல்
நல்லதே போலும் என்றான்.

எனச் சிந்தாமணியும் ஐவர் ஒருத்தியை மணந்ததைச் சிரித்தது.

இனி, ஒரு தீயசெயல் செய்துவிட்டுப் பின் அதற்குக் கழுவாய் தேடும் தீயொழுக்கம் தமிழர்பால் இல்லை. இதனால் அன்றோ திருவள்ளுவர்,

''எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று''

என்று கழுவாய் முறையை இகழ்ந்துரைத்தார்.

இனி,

பிறவியில் உயர்வு தாழ்வில்லை; மக்கள் நிகர் என்று ஒழுகுவது தமிழர் ஒழுக்கம்.

''பிறப்பு ஒக்கும், எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்'' என்ற திருக்குறளை நோக்குக.

பிறவியில் உயர்வு தாழ்வு பேசுவது ஆரியர் ஒழுக்கம்.

'' நால்வகைச் சாதி இந்
நாட்டினில் நாட்டினீர்.''

என்று கபிலர் ஆரியர் கொள்கையை இழித்துரைப்பதும் நோக்கத்தக்கது.

''அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று''

என்ற வள்ளுவர் வாய்மொழி காண்க!

தீய வழியில் ஒன்றைத் தேடியடைதல் தமிழர் பால் இல்லை. இதனால்,

இன்றி யமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல்.

என்றார் வள்ளுவரும்.

'தொல்லை நேர்ந்துழி அல்ல புரியலாம்' என்று மறு நூல் கருதுகின்றதும் கருதத்தக்கது.

இங்குக் காட்டிய தமிழரின் ஒழுகலாறுகளில் சில வற்றை இந்நாள் தமிழர் கைவிட்டும் இருக்கலாம். ஆயி னும் கைவிட்டவர்கள் வழுக்கி விழுந்தவர்களே யன்றி அவர்களின் உள்ளத்தின் இயற்கை நிலையினின்றும் மாறி னவர் அல்லர்.

எனவே,

'தமிழன் யார்?' என்பதற்கு விடை கீழ்வருமாறு :-

தமிழ்நாடு, தாய்நாடு, தமிழே தாய்மொழி, தமிழர் ஒழுக்கம் தனதொழுக்கம்.

என்னும் இம் மூவகைப் பேறும் பெற்றவன் தமிழன்; மற்றவன் பிறனே!

குயில், 1-6-1958

*

# 53
# திரைப்பட எழுத்தாளர் சங்கம் அடிப்படை நோக்கம்

இச் சங்கத்திற்குள்ள அடிப்படை நோக்கம் கீழ் வருமாறு அமைதல் வேண்டும்.

(1) கதை — பிறர் எழுதியதையே தேடிப் பிடிக்க வேண்டும். அந்தக் கதை இன்னாரால் எழுதப்பட்டது என்று தெரியாதிருக்கச் சிறிது மாற்றம் செய்து கொள்ளலாம். ஆனால் ஒன்றை மட்டும் மறவாது பின் பற்ற வேண்டும். இன்னார் எழுதிய கதையைத் தழுவியோ, மாற்றியோ எழுதியதாக வெளிக்குத் தெரியவே கூடாது. தெரிந்தால் பட முதலாளியிடம் மதிப்புக் குறைவு ஏற்படும். கதைக்குப் பணம் கொடுக்கவும் மறுப்பார்கள்.

(2) பேச்சமைப்பு — பிறர் எழுதிய செய்யுள் நூற்களையும், உரைநடை நூற்களையும், அவை வெளிவந்தவுடனே வாங்கி அடுக்கி வைத்துக்கொண்டால் மட்டும் போதாது. கருத்தாகப் படிக்க வேண்டும். பேச்சு எழுதும்போது அந் நூற்களிலிருந்து சொற்றொடர்களை எடுத்துத் தாம் எழுதியது போலவே எழுதிக் கொள்ள வேண்டும். இதில் மானமோ, நாணமோ இருக்க வேண்டியதில்லை. இன்னார் நூற்களிலிருந்து திருடினேன் என்று எந்த எழுத்தாளனாவது சொல்லி வைத்தால் அது எழுத்தாளர் கூட்டத்திற்கே குறைவை ஏற்படுத்தும்.

(3) பாட்டு — பிறர் பாட்டினின்று அடி அடியாய் அல்லது தொடர் தொடராய் எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் திருடியது தெரியக் கூடாது. அசைகளை மாற்றிக் கொள்க. தெரிந்து விட்டால் பட முதலாளி பாட்டின் முதலாசிரியரின் முகவரியைத் தெரிந்து கொள்ள நேரும். எழுத்தாளரின் வருமானத்தில் மண்விழும்.

எவர் எழுதியதையும் பார்க்காமல், இருக்கும் கையிருப்பைக் கொண்டே பாட்டு எழுதித் தொலைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். அப்பொழுது எழுத்தாளர்களுக்குத் தெரிந்த மட்டமான சொற்களையோ மட்டமான கருத்துக்களையோ வைத்துப் பாட்டு எழுதிவிட அஞ்சுதல் கூடாது. முதலாளிகளில் எவராவது ஒருவர் முட்டாளாயில்லாமலும் இருக்கலாம். அவர் இதென்ன மட்டமாக இருக்கிறதே என்று கேட்டால் அப்போது தான் பணம் வரும் என்று ஒரு போடு போட்டு விட வேண்டும். எழுத்துப்பிழை, சொற்பிழை, பொருட்பிழை -நல்ல வேளையாய் எழுத்தாளர்க்குத் தெரியாமல் இருந்தால் அதைப் பெருமையாகக் கொள்ளவேண்டும்.

(4) பொதுநெறி — இந்தத் தமிழ் நாட்டு மக்கட்குத் திரைப்பட எழுத்தாளர் காட்ட வேண்டிய பொது நெறிகள் இரண்டு உண்டு. ஒன்று பெரியார் நெறி— மற்றொன்று இராசகோபாலாச்சாரி நெறி. முன்னது தமிழர் நெறி; மற்றது ஆரிய நெறி.

இவற்றில், பெரியார் கொள்கையால் பெருமை தேடிக் கொள்ள வேண்டும். ஆரிய நெறிக்கே அடிமைப்பட வேண்டும். ஏனென்றால், ஏதுங் கெட்ட ஆரியர்தாம் நம்மைத் தலையில் தூக்கிக் கொண்டு ஆடக்கூடும். அதிலும் நம் எழுத்தாளர் கூட்டத்தில் ஆரியனுக்குப் பிறந்தவனிருந்தால் அவனுக்கு முதன்மை கொடுக்க வேண்டும்.

குறிப்பிட்ட இந்த நான்கும் இன்றியமையாதனை எழுத்தாளர்களுக்கு!

குயில், 28—10—1958

*

# 54
# இரா. சிரி. தேசிகன் சிறுமதி

தேசிகன், சுசாதிமித்திரன் தீபாவளி மலரில் ''தமிழில் ஆங்கிலச் சாயை'' என்ற தலைப்புடன், 'செய்ந்நன்றி கொன்றவன்' என்ற சொற்றொடரை வள்ளுவர் தருகின்றார். இது க்ருதக்னன் என்ற வடமொழித் தொடரின் மொழிபெயர்ப்பைத் தவிர வேறில்லை' என்று எழுதியுள்ளதாக நண்பர் கழுதூர்த் திருநாவுக்கரசு நமக்கு எழுதி, இதற்குக் குயிலின் பதிலென்ன என்றும் கேட்டிருக்கின்றார்.

தமிழர் செய்த நன்றியைக் கொன்றே இன்று வரைக்கும் தின்று கொழுப்பாராகிய ஆரியரின் நூல்களில், நன்றி கொல்வதென்னும் பொருளுடைய ஒரு தொடரைத் தேசிகன் கண்டால், அது, நன்றி செய்து நன்றி செயப்பட்டாரால் கொன்றன்ன, இன்னா அடைந்தாரான தமிழரின் தமிழ்நூற் சொற்றொடரின் வடமொழி ஆக்கம் எனக் கருதி அமைவுற வேண்டும்.

அன்றியும்,

என்றுமுள தென்றமிழின் தொன்று தொட்டுவரும் பாத்திரத்தையும் பாவேந்தர் நாத்திறத்தையும் நன்றாய்ந்துகுன்றாச் சுவையுணர்வைக் கொள்ள வேண்டும். தேசிகன் சிறுமதி. அதை இன்றேனும் எய்துமா?

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை' என்று எடுத்தார் வள்ளுவர். அவ்வடியின் முதற்சீர் தனக்கோர் எதுகை வேண்டிற்றன்றோ! 'செய்ந்நன்றி

கொன்ற மகற்கு' என்று முடித்தார். கவிஞரின் பண்பட்ட உள்ளமாகின்ற அச்சில் பதிந்து வெளிவரும் பாட்டுத் திறத்தின் இயல்பு நுனித்து நோக்குறுதல் வேண்டும்.

'செய்ந்நன்றி கொன்ற மகன்' என்றது கவிஞரின் உள்ளத்தினின்று எழும் இயற்கைத் தேனருவியின் தெறிப்பு. அது வள்ளுவரின் படைப்பு. அந்தத் தேனருவியை நோக்கி, ''நீ வடநாட்டு ஆற்றினின்று ஒரு செம்பு நீர் கொண்டு வந்தாயா'' என்று கேட்டது நகைப்புக்கே இடமாகும்.

அன்றியும்,

'சமஸ்கிருதம் எனின் சேர்த்துப் பொறுக்கிச் செம்மைப் படுத்தப்பட்டது' என்பது பொருள்.

உண்மை இவ்வாறாகத், தமிழ்ப் பெருநூற்களில் காணப்படும் அரிய தமிழ்ச் சொற்றொடர்க் கருத்துக் களைத் தேசிகன்கள், வடமொழியின் நூற்களில் காணின், இவை தமிழினின்று வடமொழியில் மொழிபெயர்க்கப் பட்டவை என்று கொள்வதே அறிவுடைமையாகும்.

குயில், 23–12–58

*

## 55

# மிக்க சலுகைக்குத் தக்கபயன் கிடைத்தது

சென்ற பொதுத் தேர்தலில் உறுப்பினரை நிறுத்தும் வகையில் முதல்வர் காமராசர் பார்ப்பனர்க்கு மிக்க சலுகை காட்டினார். தேர்ச்சி பெற்ற சட்டமன்ற உறுப்பினரில் அமைச்சரைத் தேர்ந்தெடுக்கும் வகையில் முதல்வர் காமராசர் பார்ப்பனர்க்கு மிக்க சலுகை காட்டினார். காமராசர் ஆட்சி உறுதிபெற வேண்டும் என்று அல்லும் பகலும் உழைத்த தமிழர் தலைவரையும், தமிழ்ப்பெரு மக்களையும் கேலி செய்து கேடு சூழ்ந்து வந்த அமைச்சர்கள் சுப்பிரமணியனையும் பக்தவத்சலத்தையும் விட்டு வைத்த வகையில் முதல்வர் காமராசர் பார்ப்பனர்க்கு மிக்க சலுகை காட்டினார். இங்குப் பார்ப்பனரின் கோரிக்கையை எண்ணித் தமிழர் தலைவரையும் தமிழ்ப்பெரு மக்களையும் ஒழித்துக் கட்டும்படி சாடை காட்டிய நேருவை மகிழ்ச்சி செய்யும் வகையில் முதல்வர் காமராசர் பார்ப்பனர்க்கு மிக்க சலுகை காட்டினார். கேட்டாலும் கிழித்தாலும் சரி. இந்த நகர சபைத் தேர்தலில் உதவி செய்யும்படி தமிழர் தலைவரை நாம் கேட்டுக் கொள்ளக் கூடாது என்று கூறிய மடப்பசங்கள் முகத்தில் காரியுமிழாமல் அவர்களை மகிழ்வித்த வகையில் முதல்வர் காமராசர் பார்ப்பனர்க்கு மிக்க சலுகை காட்டினார். எல்லாத் துறையிலேயும் தமிழர்களை ஈடுபடுத்த வேண்டும் என்று கட்டளையிட்டு, அதன்படி செய்து வரும் நேருவைச் சிறிது திருத்தாமல் அவரை மகிழ்வித்த

வகையில் முதல்வர் காமராசர் பார்ப்பனர்க்கு மிக்க சலுகை காட்டினார்.

இவ்வளவு சலுகை காட்டிய முதல்வர் காமராசருக்கு, பார்ப்பனர் என்ன சலுகை காட்டினார்கள்! சலுகை காட்ட வேண்டாம்; கலகம் வளர்க்காமலாவது இருந்தார்களா என்றால் அதுதான் இல்லை.

ஒவ்வொரு பார்ப்பனனும் ஒவ்வொரு பார்ப்பனத்தியும் வரிந்து கட்டிக்கொண்டு முதல்வர் காமராசர் ஆட்சி ஒழிந்து போக வேண்டும் என்பதற்காக, அவரின் எதிர்க் கட்சியாகிய பார்ப்பானுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாக உறுதியளித்த கண்ணீர்த் துளிகளுக்கே தம் வாக்குச் சிட்டைப் போட்டார்கள்; மற்றவர்களையும் போடும்படி தம்மிடத்தில் உள்ள அதிகாரத்தை மேற்கொண்டார்கள். இன்றைய நிலையில் ஒரு பார்ப்பானிடம், நூற்றுக்கணக் கான தமிழர்களின் குடுமி அகப்பட்டிருப்பதை எவனால் மறுக்க முடியும்? பிச்சை எடுத்துக்கொண்டு வந்த பார்ப் பனப் பசங்களிடமெல்லாம் இன்று அதிகாரம், அலுவல் திணிக்கப்பட்டிருக்கவில்லையா?

முதல்வர் காமராசர் இவைகளையெல்லாம் எண் ணிப் பார்க்கவேண்டும்.

குயில், 28-4-59

*

## 56

# இவர்களைப் பாருங்கள்

தமிழ்த் தாயின் தலையை வெட்டக் கத்தி தீட்டு கின்றார்கள் சில தமிழர். தாயின் பகைவர்களைத் தட்டிக் கொடுக்கின்றார்கள் சில தமிழர். அன்னை அழுகுரல் கேட்கும் அடுத்த தெருப்பக்கம் நடையைத் திருப்புகின்றார் கள் பல தமிழர். தமிழன்னையின் தாழ்வு நிலை கேட்டு, அப்படி ஒருதாய் இருப்பதே தெரியாதென்று கைவிரித்துச் செல்கின்றார்கள், மற்றும் பற்பல தமிழர்கள். தம்மைத் தமிழர் என்று சொல்லிக் கொள்ளவே நாணிச்செல்கின்றனர் சில அயல்மொழிவல்ல தமிழர்கள். சின்னஞ்சிறிய நோக் கங்கள் கொண்ட தமிழ் நிறுவனங்கள் தோன்றுகின்றன; தோன்றிய அதிலேயே தூங்கிவிடுகின்றன. ஒற்றுமை கெட்டு மாய்ந்து விடுகின்றன.

(அ) நம் தாய் மொழியையும் அதன் தொடர் புடைய கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் ஆகிய மொழிகளையும் எல்லோரும் படிக்கும்படி செய்யவும், ஆராய்ச்சி செய்து உலகின்முன் வைக்கவும் முன்னுக்குக் கொண்டு வரவும் தமிழர்கள் ஆவன செய்ய முற்பட்ட துண்டா?

(ஆ) உலகுக்கு முதற்கண் தமிழர் அருளிய அறம், பொருள், இன்பம், வீடு பற்றிய தமிழ் நான்மறை பற்றி யும் அதனோடு தொடர்புடைய தமிழ்த் தத்துவநூல், இலக்கியங்கள் பற்றியும் ஆராய்வதும், ஆராய்வதற்கு ஊக்கம் ஊட்டுவதும் தமிழரின் முதல் வேலையன்றோ!

(இ) உலகிலுள்ள பன்னாட்டுத் தத்துவங்கள், கலைகள், இலக்கியங்கள், மொழிகள் இவற்றைத் தேடி ஆராய்ச்சி செய்கின்ற நிறுவனங்களில், நம் தமிழ்மொழி இலக்கியங்கள், கலைகள், தத்துவங்கள் சேர்க்கப்பட வேண்டுமே என்று எந்தத் தமிழன் கவலை கொண்டான்?

(ஈ) இவைகளைச் செயற்படுத்த எவ்வகை முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியது ஒவ்வொரு தமிழரின் கடமையன்றோ?

(உ) சமஸ்கிருதம் என ஒரு மொழி இருந்தது என்று காட்ட வேண்டி, மிகக் கவலையோடு அந்த மொழியைப் பேசப் பழகிக் கொண்டவர்கள் இன்று எத்தனை பேர்கள் என்று கணக்கெடுத்ததில் இத்தனை பெரிய துணைக் கண்டத்தில் ஆயிரம் பேர்கள்கூட அகப்படவில்லை. இருந்தால்தானே! தமிழ் அப்படியா? நான்கு கோடி தமிழர்களின் மூச்சும் பேச்சும் தமிழைவிட்டு இம்மியும் அசைந்ததில்லை. சாகாத் தமிழுக்கு தமிழகத்தில் எத்தனைப் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன? உலகிலுள்ள பல்கலைக் கழகங்களில் ஒன்றிலேனும் உலக முதன் மொழியாகிய நம் தமிழ்மொழி பற்றிய பேச்சு உண்டா?

தமிழக மக்கள் பேரால் உலகப் புகழ் பெற்றுள்ளவர்களில் ஒருவர்க்காவது இதில் எள்ளத்தனைக் கவலை இருந்ததா?

(ஊ) உலகு தொடங்கியது முதல் இன்றுவரை பல படையெடுப்புகளுக்கும் சாகாது உயிரை வைத்திருக்கும் தமிழர் தலைமுறையைக் காப்பாற்றத் தமிழ்க் கல்விக் கழகங்களைத் தமிழகத்தில் அடிக்கொன்றாக விரிவு படுத்துவதும் அக்கழகங்களில் இந்தி முதலிய கொடிய விலங்குகள் புகாது பார்த்துக் கொள்வதும் தமிழர்களின் இன்றியமையாத கடமையன்றோ? இவ்வகை மொழிப் போர் நீடிக்க—வெற்றிபெற என்ன செய்தார்கள், தமிழ்ப் பெருஞ் செல்வர்களும், தமிழ்ப் பெரும் கல்வி வல்லாரும்?

(எ) தமிழாராய்ச்சி வல்லார் தமிழகத்தில் இல்லாமல் இல்லை. தமிழைப் பரப்பும் நோக்கமுடைய ஆற்றலினர் இல்லாமலில்லை. அவர்களைத் தமிழ்ப் பற்றிய இவ்வகைப் பெருநோக்கத்தில் ஒன்றுபடும்படி செய்வதன்றோ செய்யத்தக்கது. புறஞ்சொல்லிப் பகை விளைத்தலா செய்யத் தக்கது?

(ஏ) பழந்தமிழ் நூல்களை உரைத் தூய்மை செய்தும் தமிழின் தொன்மை மேன்மைகளை விளக்கும் புதுத் தமிழ் நூற்களையும், அவை பற்றிய ஏடுகளையும், இதழ்களையும் பிறர் கட்டுப்பாட்டுக்குட்படாதபடி – வெளியிட முன்வர வேண்டாமா?

(ஐ) தமிழகத்தில் தமிழர்களால் ஏற்படுத்தப்படும் கண்காட்சிகள் ஆண்டுதோறும் அளவற்றவை திறக்கப்படுகின்றன. தமிழன்னை, தமிழ் நாகரிகம், பண்பாடுகளின் மேம்பாடுகள் காட்சியளிக்கின்றனவா அவற்றில்? இந்த நினைவேனும் இருந்ததாகத் தெரிகின்றதா, தமிழ்த் தலைவர் உள்ளத்தில்? தமிழனின் தச்சுத்திறனும், இசைக்கலைத் திறனும், ஓவியத் திறனும் வரிசைப்படுத்தப்படுகின்றனவா எங்கேனும்?

(ஒ) பெரிய தமிழ்நூல் நிலையங்கள் தமிழகந்தோறும் உண்டாக வேண்டும் என்றும், தமிழ் நூற்கள், அயல்நாட்டு நூற்களிலும் இடம்பெற வேண்டுவது இன்றியமையாதது என்றும் தமிழ்ப் பெரியோர் எண்ணி ஆவன செய்ய வேண்டும். இருக்கும் நூல் நிலையங்களில் தமிழரின் மேற்பார்வையே நிலைக்கச் செய்ய வேண்டும்.

(ஓ) தமிழர் தத்துவங்களையும் தமிழின் தொன்மை மேன்மைகளையும் உலகமெல்லாம் சென்று பரப்பத் தமிழ்ப் பேராசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் ஏற்படுத்தி தமிழ் படிப்பாரை உலக முழுவதும் ஏற்படுத்த வேண்டும்.

*(ஔ)* உலகெங்கணும் பரவலாக உண்டாக்கப்படும் தமிழ் விரும்பினரைக் கொண்டு பெரிய பெரிய தேர்வு களை ஏற்படுத்தி வெற்றி பெற்றோர்க்கு உலகப் புகழ் பரிசுகள் வழங்க வேண்டும். தமிழ் என ஒன்று இருப்ப தாகவே இன்று அயல் நாட்டினர் எண்ணவில்லையே. அவ்வாறு எண்ணாதபடி தமிழரின் பகைவர்கள் செய்கின் றார்களே! செத்த மொழி இருப்பதாக அவர்கள் காண்பிப் பதில் நமக்கு வருத்தமில்லை. இருந்தும் மொழி செத்த தாகச் செய்யப்படும் முயற்சியை விட்டுவைக்கலாமா?

*(க)* தமிழுக்கென ஓர் பெரு நிறுவனத்தை நிறுவ நினைத்தால் இன்று நம்மிடமிருக்கும் தமிழ்ச் செல்வர்க ளால் தமிழ் வல்லுநர்களால் முடியாது போய்விடுமா? அவ்வாறு ஒரு நிறுவனத்தை நம் தமிழ்த் தாய்க்கு ஆக்கு வதும் அதன் கிளை நிறுவனங்களை உலகெங்கும் நிறுவு வதும் இன்று தமிழர்க்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை எண்ணிய மறுகணத்திலேயே வெற்றியடையக் கூடிய தல்லவா?

*(கா)* தமிழர் நாகரிகம், தமிழின் தொன்மை மேன்மை மாய்ந்து மண்ணாக வேண்டும் என்று பகைவர் எண்ணி வரும் இந்நாளில் மேற்சொன்னவரெல்லாம் தொண் டாற்றுவதில் பெருமுயற்சி செய்து கொள்ள வேண்டு மன்றோ? தூங்குகின்றார்கள்.

பாருங்கள் இவர்களை!

குயில், 16—6—1959

*

57

# பாருங்கள் அவர்களை

இந்தியப் பண்பாட்டிற்கும் ஆத்ம வளர்ச்சிக்கும் பாது காவலாக இருப்பது சமஸ்கிருத மொழி ஒன்றே.

உலகத்தின் உயர்தனிச் செம்மொழியாகவும் இந்தியப் பண்பாட்டினை உண்மை உணர்ந்து கொள்ளுவதற்கேற்ற திறவு கோலாய் உள்ளதும் சமஸ்கிருத மொழியாகும்.

இவ்வாறு அவர்கள் உறுதியெடுத்துக் கொள்கின்றார் கள்.

இவர்களின் உயர்தனிச் செம்மொழிக்கு உள்ள பெயரைப் பாருங்கள். ''சமஸ்கிருதம்'' என்றால் என்ன பொருள்? திருத்தி அமைத்தது என்பது.

ஆத்ம வளர்ச்சி சமஸ்கிருதத்தில்தான் இருக்கின்ற தாம். சூதாடுவது பெருமை என்று எது கூறுகின்றது? ஒரு பெண்ணைப் பார்த்து புணர்வது தக்கது என்று எது சொல்லுகின்றது? கட்குடியை மெச்சுகிறது எது? கொலை வேள்வியைக் கூறி மகிழ்வது எது? கழுவாய் என்னும் கயமைச் செயலை உயிர் என்று கொள்ள வேண்டும் என்று கூறுவது எது? மக்களின் உயர்வு தாழ்வு கூறி மடமை வளர்ப்பது எது? தீமை வந்துற்ற போது திருடலாம் என்று செப்புவது எது? மக்களைக் கொன்று வேள்வி செய்ததை மகிழ்ச்சியோடு கூறி வற் புறுத்துவது எது? இந்த உலகமே சான்றுவிடும் ''சமஸ் கிருதம்'' அன்றோ?

அவர்களைப் பாருங்கள்.

செத்த சமஸ்கிருதத்தை இருப்பதாய்க் காட்ட—பொய்மை மிகுந்த அவர்களின் நூற்கருத்துக்களை உயர்ந் தனவென்று உலகெங்கும் காட்ட—

அரசியல் தலைவர்களும், அரசர்களும், நீதிபதிகளும் மற்றும் அலுவலால் பதவியால் பேர்பெற்றவர்களும் உழைக்க முன்வந்துள்ளார்கள். தம்மேற் போட்டுக் கொண்ட பணிகளை வெற்றிபெற வைக்கின்றார்கள்.

இவர்களைப் பாருங்கள்.

இந்நிலப் புகழ் வாய்ந்த தமிழர் ஏ. இராமசாமி முதலியார் தமிழ் மொழியை, தமிழர் தத்துவத்தை, தமிழ் மேன்மையை, தமிழர் தொன்மையை எண்ணுகின் றாரா? ஏற்றமுடையதைச் செய்கின்றாரா? அதன் ஆற்றலை அழிப்பாரை அடக்கக் கண் திறந்து பார்க்கின்றாரா?

பார் முழுவதும் பேர் சொல்லும் தமிழர் ஏ. இலக்கு மணசாமி முதலியார் நினைத்தால் இனிக்கும் தமிழும் தமிழிலக்கியமும் உலகை ஆளாதா?

வையம் போற்றும் தமிழர் எஸ். ஜி. மணவாளராமா னுஜம் இருக்கும்போதும் தமிழர் ஒளி பகைவரால் மாய்க்கப்படுகின்றது என்றால் யாருக்குக் குறைவு?

தரத்தில் குறைந்தது தமிழ் என்று உரைத்தார். பகை வர் என்றால் தமிழன் எம். இரத்தினசாமி அவர்களுக்கு எரிச்சல் வரவேண்டாமா?

பேரறிஞர் எஸ். இராமநாதனை நாம் பெற்றிருக்கின் றோம், என்று தமிழர் பெருமையுறுவதுண்டு. தமிழருக்குப் பரிந்து அவர் வரிந்து கட்டிக்கொண்டு முன்வர வேண் டாமா?

நீதிபதி சோமசுந்தரம் அவர்கள், நீதிபதி கணகபதியா பிள்ளை அவர்கள், நீதிபதி நாடார் அவர்கள், விஞ்ஞா

னச் செல்வர் ஜி.டி. நாயுடு அவர்கள் முதலியவர்கள் தமிழன்னையின் தவப்புதல்வர்கள் அறிவாற்றலால் உலகப் புகழ் வாய்ந்தவர்கள் கண்கலங்கும் தமிழன்னையை ஒருமுறை எண்ணினாலும் போதும்.

இவர்களைப் பாருங்கள்.

தமிழ் படிப்பதும், தமிழ் தத்துவ நூற்களை ஆராய்வதும் தாழ்வு என்று எண்ணியிருக்கின்றார்கள்.

அதுமட்டுமா?

அவர்களைப் பாருங்கள்.

தம் மொழி, நாகரிகங்களுக்கு உழைப்பான் ஒருவனை வரிந்து கட்டிக்கொண்டு ஓடி எல்லோரும் ஆதரிக்கின்றார்கள். உழைக்கின்றார்கள்.

அதுமட்டுமா?

எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் தம் மொழி நூற்களை ஆராய்ச்சி செய்வதில் தவறுவதே இல்லை.

இவர்களைப் பாருங்கள்.

ஒரு தனி முதியவர் தமிழர் மேன்மைக்குத் தூக்கமின்றித் துய்ப்பதுமின்றி உழைக்கின்றார். இருக்கும் உலகப் பேரறிஞர்கள் என்ன செய்கின்றார்கள்? அந்த முதியவர் — பெரியவர் இராமசாமி தமிழர் மேன்மையைப் பற்றிய எல்லாத் துறைகளிலும் உள்ளஞ் செலுத்தட்டும் என்று எண்ணி வாளாயிருப்பது இந்நாளா?

வேண்டும்.

தமிழர் வரலாறு, தமிழின் தொன்மை, மேன்மை, தமிழிலக்கியம் உலகுக்கு இன்றியமையாமை அனைத்தினையும் உலகெல்லாம் பரப்பவும், தமிழகத்திலும் பிற நாடு

களிலும் தமிழ்க் கல்வியைப் பரப்பவும், தமிழ்மொழி வைத்துப் பல்கலைக் கழகங்களைத் தமிழகத்தில் மாவட்டந்தோறும் நிறுவவும் பிற நாடுகளின் பல்கலைக் கழகங்களில் தமிழ் ஆராய்ச்சி நடத்தி விளக்கவும்.

உலகத் தமிழ்ப் பேரவை ஒன்று, அடங்கல் உலகம் முழுவதும் ஆயிரம் கிளைகள் பெறும் வண்ணம் நிறுவத் தமிழ்ப் பேரறிஞர்களே! தமிழ்ப் பெருஞ் செல்வர்களே! தமிழ்ப் புகழ் மிக்கோரே! தமிழகப் புலவர் குழுவினரை அயர்வின்றி முயல வேண்டுகின்றேன்.

அவர்களைப் பாருங்கள்!!

குயில், 16–6–1959

*

# 58
# அவர்களைப் பாருங்கள்

ஆரியர் பலரும் கூடுகின்றார்கள் பாருங்கள்! பொய்யை மெய்யென்று உலகுக்குக் காட்ட உலவுகின்றனர் பாருங்கள் சமஸ்கிருத விசுவபரீஷத் (1951, மே, 11—12)

நோக்கங்கள்:

(அ) அதனோடு தொடர்புள்ள சமஸ்கிருத மொழியையும், பாலி மொழியையும், பிராகிருத மொழியையும் எல்லோரும் படிக்க வேண்டுமாம். அதற்கு ஆவன செய்ய வேண்டுமாம்.

செத்துப்போன சமஸ்கிருதத்தை இருப்பதுபோல் பேசுவது எதற்கு? இருக்கும் தமிழைச் செத்ததுபோல் காட்டுவதற்கு அல்லவா?

(ஆ) இந்து தத்துவம் பற்றியும் அதனோடு தொடர்புடைய மற்றவை — (புராணம் — கொலை வேள்வி — கழுவாய்) பற்றியும் ஆராய்ச்சி செய்ய வேண்டுமாம். அவ்வாறு நடைபெற்று வரும் ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்த வேண்டுமாம்.

இந்தக் கற்பனைப் பேச்சுக்களால் முதலில் தோன்றிய தமிழ் நான்மறையையும் தமிழன் முதலில் கண்ட எண்ணூலையும் (சாங்கியம்) தொன்னூலாகிய தொல்காப்பியம், திருக்குறள் முதலிய மெய்ந்நூற்களையும் உலகம் மறந்துவிடவேண்டும் போலவும்!

(இ) இந்த நோக்கங்களைக் கொண்டோ —இதே துறையில் ஈடுபட்டோ உலகம் எங்கும் இயங்குகின்ற

எல்லா நிறுவனங்களோடும் சேர்ந்து பணியாற்ற வேண்டுமாம்.

இப்படி பல நிறுவனங்கள் உலகில் இருக்கின்றன போலும்.

(ஈ) இந்த முடிவுகளைச் செயற்படுத்த எல்லா வகையான முயற்சிகளையும் மேற்கொள்ளப் போகின்றார்களாம்.

மெய்ம்முயற்சி, பொய்ம் முயற்சிகளில் எதையும் மேற்கொள்வார்கள். மெய்ம் முயற்சிக்கு எங்கே போவார்களோ தெரியவில்லை.

(உ) சமஸ்கிருத பல்கலைக் கழகம் ஒன்று நிறுவ வேண்டுமாம். அல்லது சமஸ்கிருதம் பற்றிய நிறுவனம் எதையாவது நிறுவ வேண்டுமாம். அல்லது எந்தப் பல்கலைக் கழகமோ, எந்த நிறுவனமோ, தம் கண்காணிப்பின்கீழ் வரும் வாய்ப்பிருந்தால் விடக்கூடாதாம்.

நேர் வழி போக வேண்டும் என்ற கட்டாயம் வேண்டுமாம். அடிப்படையில் நேர்மையிருந்தால்தானே!

(ஊ) தம் மரபைப் பாதுகாக்கும் கல்விக் கழகங்களை ஊக்கப்படுத்திப் பரப்ப வேண்டுமாம்.

ஏமாறும் இனங்கள் இப்போதும் இருந்தால்தானே!

(எ) சமஸ்கிருத மொழிப் பற்றையும் அதைச் சார்ந்த மற்ற மொழிகள் பற்றியும் ஆராய்கின்ற – பரப்புகின்ற எல்லா நிறுவனங்களையும் ஒன்றுபடுத்தும் நோக்கத்தோடு சமஸ்கிருதப் பேராசிரியர்களையும் இந்து சமய தத்துவ ஆசிரியர்களையும் குறிப்பிட்ட காலத்தில் ஒன்று கூட்ட வேண்டுமாம்.

(ஏ) இவைகளைப் பற்றிய நூல்களையும் மலர்களையும் இதழ்களையும் வெளியிட வேண்டுமாம்.

(ஐ) கண்காட்சிகள் ஏற்படுத்த வேண்டுமாம்! ஏடுகள், நாணயங்கள், செப்புப் பட்டையங்கள், கல்வெட்டுகள், சிற்பங்கள், படங்கள் இவற்றின்மேல் தம் ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமாம்.

அப்போதுதானே மாற்றியமைக்க வாய்ப்பு ஏற்படும்.

(ஒ) சமஸ்கிருத நூற்கள், தத்துவ நூற்கள்—இவை பற்றிய மலர்கள் ஆகியவற்றைத் தொகுத்து வைத்துள்ள நூல் நிலையங்களின்மேல் தம் ஆட்சியைத் திணிக்க வேண்டுமாம்.

எல்லாம் ஆரியர் நாகரிகமே என்று காட்டத்தக்க வாய்ப்பு வேண்டுமாம்.

(ஓ) இந்து தத்துவத்தை ஆராய்வதற்கும் பரப்புவதற்கும் பேராசிரியர், படிப்பவர்கள், விரிவுரை ஆற்றுபவர், உறுப்பினர்கள் ஏற்படுத்தப் பணிபுரிய வேண்டுமாம்.

விடா முயற்சி செய்ய வேண்டும். செல்லாக்காசை செல்ல வைப்பது இலேசல்ல அல்லவா?

(ஔ) தேர்வுகள் நடத்த வேண்டுமாம். பட்டங்கள் வழங்க வேண்டுமாம்.

இதனோடு பணமும் கொடுத்தால் நோக்கம் இலேசாக நிறைவேறும்.

(க) இந்தப் பரீஷத்திற்குக் கிளைகள் எங்கும் நிறுவப்பட வேண்டுமாம்.

செய்தி புரியாத அயல் நாடுகளில் காசு செலவழித்தால் நிறுவத் தடை ஏற்படாது.

(கா) மேற்சொன்ன நோக்கங்களை நிறைவேற்ற எல்லா வகையான உபாயங்களையும் மேற்கொள்ளலாமாம்.

## பாருங்கள் அவர்களை!

இதுமட்டுமன்று; இந்த முயற்சி பற்றி அவர்கள் பல்லோர் முன்னிலையில் எடுத்துக் கொண்டுள்ள சூளுரையைப் பாருங்கள்.

அகில பாரதீய சமஸ்கிருத பரீஷத்தின் பிரதிநிதிகளாகிய நாங்கள், பக்தியுடனும் உறுதியுடனும் எடுத்துக் கொள்ளும் பிரதிக்ஞை இது!

(அ) இந்தியப் பண்பாட்டிற்கும் ஆத்ம வளர்ச்சிக்கும் பாதுகாவலாக இருப்பது சமஸ்கிருத மொழி ஒன்றே யாகும்.

உலகத்தின் உயர்தனிச் செம்மொழியாகவும் இந்தியப் பண்பாட்டினையும் உண்மையையும் உணர்ந்து கொள்வதற்கேற்ற திறவுகோலாக உள்ளதும் அம்மொழியே யாகும்.

மேலும் சமஸ்கிருத மொழியின் வழியாகவும் அதனோடு தொடர்புடைய மற்ற மொழிகளின் வழியாகவுமே உலக உயிர்கள் எல்லாம் ஆத்ம விளக்கம் அடைய முடியும்.

(ஆ) இந்தியாவின் உடனடியான இன்றியமையாத தேவைகள் சமஸ்கிருத மொழியைப் பெருக்குவதனாலேயே தான் நிறைவேறும்.

வாழ்வுக்குரிய உடம்பு, உயிர் போன்ற இன்றியமையாததாகச் சமஸ்கிருத மொழி ஆக்கப்படவேண்டும்.

இந்து தத்துவ ஆராய்ச்சியும், வளர்ந்து வரும் அறிவு வளர்ச்சியினோடு இணைந்து செல்வதற்கான பணி யாவும் நம்முடையவை என்று நாம் சொல்லிக் கொள்கின்ற வேறுபட்ட — பலவகைப்பட்ட பண்பாடுகளை நம்முடையவைகளே என்று உலகுக்குக் காட்ட வேண்டும்.

(இ) இக் குறிக்கோள்களை அடைய வேண்டி இந்தச் சமஸ்கிருத விசுவ பரீஷத்து என்ற நிறுவனத்தை

அமைப்பது என்றும், அந்த நிறுவனம் ''சோமநாதர்'' அறநிலையத்துடன் பரீஷத்தின் கொள்கைகளையும் நோக்கங்களையும் கொண்டு உலகெங்கும் இயங்கிவரும் பிற நிறுவனங்களுடன் கூடிச் செயலாற்ற வேண்டும் என்றும் வெளிப்படையாகக் கூறுகின்றோம்.

இந் நோக்கங்களை நிறைவேற்றுவோம் என்பதில் எங்கட்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. இவையே நாங்கள் எடுத்துக் கூறும் ''சூளுரை''

மேற்கொண்ட சூளுரையை அனைவரும் மேற்கொண்டதற்கு அடையாளமாக எங்கள் கையொப்பங்களை இடுகின்றோம்.

பத்மநாபதாச பலராம வர்மா (திருவாங்கூர்)
பாபு புருஷோத்தம தாசு தாண்டன்
கே. எம். முன்ஷி
டாக்டர் இராஜேந்திரபிரசாத்
சேம் சாகிபு (நவநகர்)
எச். வி. திவேதியா
நீதிபதி என். எச். பகவதி
பிக்கு ஜினரத் நாஜி
உமேஸ் மிச்ரா
ஆச்சார்யா டி.ஏ.வி. தீட்சிதர்.

மற்றும் பலர்.

குயில், 16–6–59

*

# 59

# ஏழ்மை ஒழியுமா?

மணச்ச நல்லூர்க் கழக உயர்நிலைப்பள்ளி மாணவர் மன்றத்தில் பேசிய குன்றக்குடி அடிகளார்,

'பேய்கள் தங்க வேண்டும் என்பதற்காக இருள் இருக்க வேண்டும் என்று நினைப்பதுபோல் பணக்காரர்கள் தருமம் செய்ய வேண்டும் என்பதற்காக ஏழைகள் இருக்கவேண்டும் என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள்' என்று கூறினார்.

இவ்வாறு அடிகள் கூறியதை விடுதலை ஆசிரியர், 'இது ஆச்சாரியார் தொடங்கியுள்ள சுதந்திராக் கட்சியை மறைமுகமாகத் தாக்குவது என்று சுட்டிக் காட்டினார். எனவே ஏழைகள் என்றும் பணக்காரர்கள் என்றும் இரு பிரிவு இருக்க வேண்டும் என்று ஆச்சாரியார் சொன்னார் என்றும், அப்படி இருக்கக் கூடாது என்று குன்றக்குடியார் சொன்னார் என்றும்,

'குன்றக்குடியார் கருத்தே சரியானது' என்று விடுதலை ஆசிரியர் கூறினார் என்றும் நாம் கொள்ளுவதில் பிழை ஒன்றும் ஏற்பட்டுவிடாது. அவ்வாறு வைத்தே மேலே நம் ஆராய்ச்சியை நடத்துகின்றோம்.

தருமம் செய்ய வேண்டும் என்பதற்காகவே ஏழைகள் இருக்க வேண்டும் என்று ஆச்சாரியாரோ, அவர் கட்சிக் காரரோ சொல்லியிருப்பார்கள் என்று நாம் எண்ணவில்லை. பணக்காரர் பணக்காரராகவே இருக்கவேண்டும் என்றுதான் ஆச்சாரியார் சொல்லி வருகின்றார். தருமம்

செய்வதற்காக ஏழைகள் இருக்க வேண்டும் என்று அவ்வளவு பொதுவாக, தருமம் பெறுகின்றவர்களிலிருந்து தம்மை விலக்கிப் பேசுவதை ஆச்சாரியாரிடம் நாம் இனியும் காண முடியாது.

பணக்காரர் இருக்க வேண்டும்; அவர்களைத் தாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது தமக்கே அவர்கள் பயன்பட வேண்டும் என்பதுதானே அவரின் அடிப்படைக் கொள்கை.

இனி,|

குன்றக்குடியார் சொல்வதை நோக்குவோம். அவர் உலகில், ஏழ்மையை ஒழித்துவிட முடியும் என்று நினைக்கிறார். அதை விடுதலை ஆசிரியரும் ஆதரிக்கிறார். ஏழ்மை என்றால் வறுமை! வறுமை காரணமாகத்தான் ஒருவன் இரக்கும் நிலையை அடைகின்றான். அதனால் இரந்து உண்பானையும் ஏழை, வறியவன் என்றே தமிழில் கூறுவதுண்டு.

இந்த வறுமை, உலகில் இருந்து கொண்டுதான் இருக்கும்; அடியோடு ஒழிக்க முடியாது என்றும், அந்த வறுமை உலகில் இருந்து கொண்டு இருப்பதும் உலக மக்களின் நடைமுறையில் ஒரு சுவையை உண்டாக்கும் என்றும், வறியவர் அதாவது இரப்பவர் உலகில் இல்லாவிட்டால் வாழ்க்கையில் சுவை இராது. நடைமுறையானது மரப்பாவை இயங்குவது போலிருக்கும் என்றும் திருவள்ளுவர் கூறுகின்றார்.

இதை நாம் இன்னும் சிறிது நுணுகி ஆராய வேண்டும்.

இரந்துண்ணும் நிலைக்கு, அதாவது வறுமைக்கு எது காரணம்?

ஈத்துவக்கும் நிலை. அதாவது செம்மைக்கு எது காரணம் என்று நோக்கினால் அறியாமையும் அறிவுடைமை

யுந்தான் காரணம் என்ற முடிவுக்கு நாம் வரவேண்டும். எனவே அறியாமை காரணமாகத்தான் வறுமை உண்டாகின்றது. அறிவு காரணமாகத்தான் செம்மை (செல்வம்) உண்டாகின்றது.

கேள்வி: குருடனும் முடவனும் நொண்டியும் வறியவர்களாகி — இரப்பவர்களாகிக் கிடக்கின்றார்கள். அவர்களின் ஏழ்மை நிலை அறியாமையாலா வந்தது?

விடை: அவர்களின் அறியாமையால் அவர்கட்கு அந்நிலை (நொண்டி முடவன் என்ற நிலை) ஏற்பட்டது. பிறக்கும் போதே அந்நிலையோடு பிறந்தார்கள் என்றால் அவர்களின் பெற்றோரின் அறியாமை காரணம்.

கேள்வி:— முற்பிறப்பில் செய்த தீவினை காரணம்!

விடை: அது கயிறு!

இனி,

செம்மை நிலைக்கு அறிவுடைமைதான் காரணம்! இல்லையா?

கேள்வி: அறிவுடையவன் ஏழ்மை நிலை அடைகிறான். அறிவில்லாதவன் செம்மை அடைந்திருக்கின்றான். மேலும் அறிவுடையவன் செல்வத்தை இழந்து விடுகின்றான். அறிவில்லாதவன் செம்மை நிலையைச் (செல்வத்தை) பெறுகின்றான். இவற்றிற்குக் காரணம் என்ன?

விடை: இவை சிறுபான்மை. இவற்றிற்கு ஊழ் என்ற தெய்வம் காரணம் என்பார்கள். சமயக் கணக்கர். அது புரட்டு. அரசியல் சட்டம் காரணம்! ஊழ் என்றாலே சட்டம் என்பதே பொருள். ஊரில் பரவலாக விற்கக் கூடிய சரக்கை எல்லாம் ஒருவன் வாங்கிக் குவித்து வைக்கிறான்; விலையை ஏற்றி விற்கலாம் என்று! விலை

குறைந்து விடுகின்றது. இழப்பு நேர்ந்து விடுகின்றது. வறுமை நிலையை அடைகின்றான். இங்கு அறிவுடையவன் வறியவனானான் என்று எண்ணுகின்றார்கள். அவன் அந்த நிலையை அடைந்ததற்கு அவன் அறியாமை மட்டும் காரணம் அன்று. வாணிகம் பற்றிய சட்டமும் அவன் வறுமைக்கு காரணம் ஆயிற்று.

ஒரு பாரட்லா குதிரைப் பந்தயத்தில் செல்வத்தை இழக்கின்றான். குதிரைப் பந்தயத்தை உருவாக்கியது சட்டம். சட்டமே காரணம் அவன் இழப்புக்கு! ஒருவன் தொழில் செய்வதில் தேர்ந்தவன். அறிவுடையவன். அவனுக்கு நாட் கூலி அரையணா பொற்காசு என்கிறது சட்டம். அந்த அறிவுள்ள தொழிலாளிக்கு ஏற்படும் வறுமைக்கு எது காரணம்? சட்டம் காரணம். எப்படிப் பார்த்தாலும் வறுமை அறியாமையால்! செம்மை அறிவால் என்றே முடியும். எனவே அறியாமை முழுதும் உலகினின்று ஒழியும் வரைக்கும் செம்மை என்பதும் இருக்கும் என அறிதல் வேண்டும். இல்லாதவர்களை இருப்பவர்களாக்குவதற்கு– இரப்பவரை இல்லாமல் செய்வதற்கு—எல்லோரும் நிகர் என்று ஆக்குவதற்கு அறியாமை போக வேண்டும். போகுமா?

விடை: போகாது, போகாது.

கேள்வி: கல்வியால் அறியாமை ''தீரும் கற்பக் கழி மடம் அஃகும்'' என்கின்றார்களே!

விடை: ஒருவன் கற்கும் அளவுக்கு—அவனிடத்திலுள்ள மடமை போகும் என்றால் அறியாமையின் முதன்மையே தீர்ந்தது என்றா பொருள்?

கேள்வி: உருசியாவில் செல்வன் வறியவன் என்ற இரட்டையே ஒழிந்துவிட்டதல்லவா?

விடை: அது கரடி.

கேள்வி: புதிய சீனாவில்கூட அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டுள்ளதாகச் சொல்லுகின்றார்களே?

விடை: இல்லை. ஏற்றத்தாழ்வு எப்போதும் இருக்கும். அறிவு அறியாமை அகல முடியாதவை. வறுமையும் செம்மையும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கும். இரப்பானும் ஈவானும் இரப்பதும் ஈவதும் எப்போதும் இருக்கும். இந்த இரண்டில் ஒன்று வேரற்றுப் போவதென்பது முடியவே முடியாது.

கேள்வி: சமயங்கள் சாற்றுவதெல்லாம் அறியாமையை நீக்குவதற்காகத்தானே?

விடை: எந்தச் சமயமாவது எந்த இடத்திலாவது அறியாமையை நீக்கிற்று என்றால் அது தனி மனிதனிடமிருந்த அறியாமையைப் பற்றியது. உலகின் அறியாமை முதலற்றுப் போக வழி சொல்லும் நூல்—கல்வி இயக்கம் தோன்றியதில்லை;தோன்றப் போவதுமில்லை.அதுபோலவே உலகில் வறுமை வேரற்றுப் போக வழி சொல்லும் நூல், கல்வி இயக்கம் இருக்கவே முடியாது. இருக்கலாம் என்றால் அந்த வறுமையை முழுதும் — ஒழிக்கவே முடியாது.

இதை நான் மட்டும் சொல்லவில்லை. தமிழ்ச் சான்றோர்கள் அனைவரும் இப்படித்தான் சொல்லுகிறார்கள். திருவள்ளுவர் இதுபற்றிச் சொல்லும்போது இன்னும் ஒருபடி தாண்டி விடுகின்றார்.

இரப்பவர் உலகில் இல்லாவிட்டால் மக்களின் நடைமுறையில் சுவை இராது என்கிறார். இதனால் இரப்பார் இருப்பர். இல்லாமற் போகார். இல்லாமல் செய்ய முடியாது என்று வைத்து அப்படி அவர்கள் இல்லாவிட்டால் உலக மக்களின் போக்குவரவு — நடைமுறை மரப்பாவை போவதும் வருவதும்போல இருக்கும். சுவையற்ற வாழ்க்கையாய் முடியும் என்று கூறுகின்றார்.

''இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று'' —குறள்

என்பது காண்க.

இவ்வாறு நலம் கூறுவதால், தமிழ்ச் சான்றோர் இவ்வாறு கூறுவதால் — ஏழைகளே முன்னேற்றமுறச் செய்யும் முயற்சியை எதிர்ப்பதாக எண்ணிவிடக் கூடாது. அதுபோலவே பொதுவுடைமைக்காரர்கள் செல்வ நிலையில் மக்கள் நிகர் என்ற நிலையை உண்டாக்கி விட்டோம்; உண்டாக்கி விடுவோம் என்று அவிழ்க்கும் பொய் மூட்டைகளை முழுதும் நம்பிவிட வேண்டும் என்று எண்ணி விடக் கூடாது. ஏழ்மையின் வேரையே அழித்து விடுவோம் என்று சொல்வோர் வாய்ப்பந்தல் போடுவோரே!

குன்றக்குடி அடிகளாரும் விடுதலை ஆசிரியரும் வாய்ப் பந்தல் வேலையில் ஈடுபடவேண்டாம். உண்மை நிலையை மக்களுக்கு அறிவிக்க வேண்டும். அறிவித்துத் தனிப்பட்டவர் கொண்டுள்ள அறியாமை ஏழ்மைகளையுடையவர்களுக்குச் சலுகை தேடவேண்டும். சாதியை ஒழிக்க முன் வரவேண்டும். வெளிப்படையாக சாதியின் பேரால் சுரண்டும் கூட்டத்தை ஒழிக்க முன்வந்து பாடுபட வேண்டும். வெளிப்படையாக மதத்தின் பேரால் மக்களைச் சுரண்டும் நிறுவனங்களை ஒழிக்கப் பாடுபடவேண்டும். வெளிப்படையாக ஏழ்மையை—வறுமையை ஒருபுறமாக ஒதுக்கி, சமநிலையின் பயனை மக்கள் நுகரும்படி செய்யலாம், அமெரிக்காவைப்போல! உருசியாவைப் போல!

உலகப் பேரறிஞர்கள் செய்யும் முயற்சியெல்லாம், அறியாமையின் முதன்மையை முழுமையாக ஒழிக்க அல்ல. தனித்தனி ஏழை மக்களைப் பலவாறாக — சாதி — மதம்— ஆகிய படுகுழிகளினின்று மீட்க—தனித்தனி மனிதனின் கெட்ட சூழ்நிலைகளை நல்லதாக்க! அதனால் அறிவு ஏணியில் சில படிகளில் அடி வைக்கும்படி செய்யலாம்; மற்றவர்போல் *பொது நலத்தை அவர்கள் நுகரும்படி செய்யலாம்.

அறியாமை முழுதும் நீக்கிய நிலை ஏழ்மை என்பது இல்லாத நிலை-இரப்பார் இல்லாத நிலை — ஆகிய இந்த நிலையை நாம் உண்டாக்க வேண்டுமானால் அது புத்தர்

சொல்லுவது போன்ற உலகின் சாக்காட்டு நிலைதான். இதையும் பார்க்க.

ஈவாரும் கொள்வாரு இல்லாத வானத்து
வாழ்வாரே வன் கணவர்
ஈவாரும் கொள்வாரு (இரப்பாரும்)
இல்லாத இடம் வானந்தான்!

குயில், 2-2-60

*

# 60
# உண்டு என்பார்; இல்லை என்பார்!

உண்டு என்பாரை வடவர் ஆத்திகர் என்பர். இல்லை என்பாரை நாத்திகர் என்பர்.

காஞ்சி நாத்திகர் குப்புசாமியவர்கள் வெளியிட்ட ஆத்திக நாத்திக சம்வாதம் என்ற நூலில் உள்ள வட சொற்றொடர்களைத் தமிழாக்கி இங்கு வெளியிடப்படுகிறது.

உண்டென்பான்–(இல்லை என்பானை நோக்கி) கடவுள் நம்பிக்கை உமக்கு உண்டா?

இல்லை என்பான்:— கடவுள் என்று எதைச் சொல்லுகின்றீர்?

உண்டு:— உலகினர் எல்லோரும் அறிந்திருக்கையில் நீவீர் மட்டும் எதைச் சொல்லுகிறீர் என்று கேட்பது சரியா?

இல்லை:— உலகினர் எல்லோரும் அறிந்திருக்கும் போது நீரும் அறிந்திருப்பீரே. தவிர கண்டவண்ணம் அதை எனக்கும் காட்டக் கூடாதா?

உண்டு:— அது காட்டக் கூடியதன்று.

இல்லை:— குணமில்லையா அதற்கு? தொழில் இல்லையா அதற்கு? இவற்றைக் கொண்டாவது குறிப்பிடலாமே?

உண்டு:— ஆம்! தன் வயத்தனால், தூய உடம்பினன் ஆதல். இயல்பாகவே கட்டுக்களினின்று நீங்குதல், அருள்

உடைமை, முடிவில்லாத ஆற்றலுடைமை, வரம்பில்லாத இன்பம் உடைமை, இவை எட்டும் கடவுளின் குணங்கள். இக் குணங்களால் ஆக்குவது-காப்பது-அழிப்பது - மறைப்பது-அருளுவது ஆகிய ஐந்து தொழில்கள். இக் குணங்களையும் செயல்களையும் கொண்டு கடவுளை அறிந்து கொள்ளலாம்.

இல்லை:— மேலே கடவுள் காணப்படாதது என்று சொன்னீரா, இல்லையா? இப்போது குணங்கள் செயல்களைக் கண்டதுபோல் சொல்லுகிறீர். காணப்படாதது எதுவோ அது உருவமில்லாதது. அதில் உள்ள குணங்கள் எப்படித் தெரிந்தன? தொழில்கள் எப்படித் தெரிந்தன?

உண்டு:— ஏன் தெரியாது? காற்று என்பது காணப்படாததுதானே! குளிர்ச்சி, வெப்பம், மேலே படுவது ஆகிய மூன்று குணம் தெரியவில்லையா? மரங்களை முறிப்பது, நீர் மண்ணை வாரி இறைப்பது முதலிய செயல்களும் தெரியவில்லையா?

இல்லை:— காற்றுக்கு இயற்கையில் குளிர்ச்சியுமில்லை; சூடுமில்லை; அவை தீயின் சேர்க்கையாலும் கதிரின் சேர்க்கையாலும் உண்டாவன. தண்ணீரில் பட்டு வந்தால் குளிர்ந்திருக்கும், தீயிற் பட்டுவந்தால் சூடாயிருக்கும். அவ்வளவுதான். அது அசையும் என்கின்றீர். அசையாத நிலையுடையதுதான். தட்பவெப்ப மாறுதல்தான் காரணம் அசைவுக்கு! இயற்கையில் காற்றுக்கு அசைவு இல்லை. ஆகையால் நீர் காட்டிய எடுத்துக் காட்டுகள் பிழையானவை.

உண்டு:— என்ன ஐயா, ஒரே அடியாய் அடித்துப் போட்டு விட்டீர்கள்; பல நாட்களாக நாங்கள் வைத்திருந்த ஆயுதங்களையெல்லாம் மண்ணாக்கி விட்டீரே. குயவனுக்குப் பல நாள் வேலை. தடி எடுத்தவனுக்கு ஒரே நாள் வேலைதானா! இருக்கட்டும்; வேறு ஒன்றைக் காட்டிக் கேட்கின்றேன். இதோ இந்த வீடு, தானே இப்

படி ஏற்பட்டு விட்டதா? இதைக் கட்டியவன் ஒருவன் இருக்கத்தானே வேண்டும்? அவனை நாம் பார்க்கவில்லை யானாலும் அவன் செயல் தெரிகின்றதல்லவா?

இல்லை:— அதுபோல் அங்கே ஒரு வீட்டைக் கட்டி னான் கொல்லுற்றுக்காரன். இங்கொன்று கட்டியதைப் பார்த்தோம். அதுபோலத்தான் நீ காட்டிய இந்த வீட் டைக் கட்டியவன் ஒருவன் இருக்கிறான் என்று எண்ணு கிறோம். கண்ணிலே காணப்படுவதுதான் இதற்கெல்லாம் ஆதாரம். வேறு ஒன்றும் இருக்க முடியாது. அதுபோலவே இந்த உலகத்தைக் கட்டியவனும் ஒருவன் இருக்கின்றான் என்று எண்ணிக் கொள்ளவேண்டுமா! அதெப்படி? வீடு கட்டப்படுவதைப் பார்த்திருக்கிறோம், கட்டியவனையும் பார்த்திருக்கிறோம்; இந்த உலகத்தைப்போல் இன்னுமோர் உலகத்தைக் கட்டும்போது நீர் பார்த்தீரா? கட்டியவனை, நீர் பார்த்திரா? சொல்லுமே.

அன்றியும் உம் கொள்கைப்படி கடவுள் எங்கும் நிறைந்தவர்! அப்படி இருக்கையில் அனைத்து உலகத் தையும் அவர் எங்கிருந்து கொண்டு கட்டி முடித்தார்? அனைத்து உலகிலும் அவர் இல்லையானால் அவர் எங் கும் நிறைந்தவராதல் எப்படி? சரி, கடவுள் வேறு; அனைத் துலகும் வேறா? உமது இந்த எடுத்துக் காட்டும் சரியில் லாமல் போயிற்றே!

உண்டு:— அதற்கும் அப்படிச் சொல்லிவிட்டீர். அனைத்துலகும் கடவுளும் கயிறும் பாம்பும் போன்றவை என்கின்றேன். இதற்கென்ன சொல்லுவீர்?

இல்லை:— கயிறும் பாம்பும்போல என்றீர். அப்படி யானால் இரண்டும் ஒன்றா? இரண்டா?

உண்டு: இரண்டுதான்! ஆனால் மாலை நேரத்தில் கயிறும் பாம்பும் ஒன்றாகவே தோன்றும் அல்லவா? அதைக் கொண்டு சொன்னேன்.

இல்லை: அப்படியானால் பாம்பு கயிறா? கயிறு பாம்பா?

உண்டு: பாம்பு கயிறுமல்ல; கயிறு பாம்புமல்ல.

இல்லை: அப்படியென்றால் கடவுள் அனைத்துலகு அல்ல. அனைத்துலகும் கடவுளல்ல என்று ஆகின்றது. சரி, கயிறு பாம்பாகத் தோன்றியது எப்படி?

உண்டு: முன்பு பாம்பைக் கண்ட பழக்கத்தால்.

இல்லை: உலகில் பாம்பு உண்டா, இல்லையா?

உண்டு: உண்டு.

இல்லை: உண்டு! அது இருந்ததால் கண்டானா? இல்லாமல் கண்டனா?

உண்டு: இருந்தால்தான் காணமுடியும். இல்லாததில் பொருளில்லையே.

இல்லை: அந்தத் தோற்றமாகிய, அதாவது இல்லாததாகிய பாம்பு கடித்தால் நஞ்சு ஏறுமா?

உண்டு: இல்லை.

இல்லை: கயிறுபோல் கடவுள் என்று சொன்னாய். பாம்பு போல் அனைத்துலகும் என்று சொன்னாய். கயிற்றில் பாம்பு பொய்யாய்த் தோன்றியதுபோல கடவுளிடமும் அனைத்துலகும் பொய்யாய்த் தோன்றுகின்றது என்று ஆயிற்று. ஆனால் முன்னம் ஒருவன் பாம்பை மெய்யாகக் கண்ட பழக்கத்தால் கடவுளையே அனைத்துலகமாக எண்ணுகின்றான் என்று ஆகின்றது. ஆயின் கயிறு வளைந்து கிடந்தால் சற்றேறக் குறைய பாம்பைப் போலத் தோன்றுவது சரிதான்! ஆனால் பாம்பின் தோற்றத்திற்கு கயிறு காரணமாய் இருந்ததுபோல அனைத்துலகின் தோற்றத்திற்குக் கடவுள் காரணமாக இருக்கவேண்டுமே! அப்படியானால் நாம் பாம்பையும் கண்டிருக்கிறோம்; கயிற்றை

யும் கண்டிருக்கிறோம். இவை ஒன்றுபோல் ஒன்று இருக்கும் என்பதையும் ஒப்புகின்றோம். ஆனால் கயிற்றைக் கண்டிருக்கும் நாம் கடவுளைக் கண்டிருந்தால்தானே. கயிறு பாம்பாய் தோன்றியதுபோலக் கடவுள் அனைத்துலக மாய்த் தோன்றும் என்பதற்கு எடுத்துக் காட்டாக நீர் புகன்ற இரண்டு பொருள்களும், கண்ணுக்குத் தோன்று வன. ஆனால் அனைத்துலகைப் பொய்யாகவேனும் அல்லது மெய்யாகவேனும் காட்டுவதற்குக் காரணமான கடவுளே கண்ணுக்குப் படாததாய் இருக்கையில் அது அனைத்துலகமாகத் தோன்றுகின்றதென்று நீர் சொன் னால் தலையாட்ட நான் என்ன பெருமாள் மாடா?

குயில், 10–5–1960

*